www.padippakam.com



சாதிப்பிரிவு இருக்கும் இடத்தில் எந்த அரசியலும், பொருளியலும் எப்படிப் பங்கீட்டுக் கொடுத்தாலும் ஒரேவருடத்தில் பழைய படி ஆகிவிடும். சாதியைக் கவனிக்காமல், சாதியை ஒழிக்காமல் பொதுவுடமை பேசுவது அரிவரி படிக்காமல் பி.ஏ வகுப்பைப் பற்றிப் பேசுவதாகும். ஆதலால் இன்றுமுதல் வேலை சாதி ஒழிபட வேண்டும்.

VADU இதழ் - 15 பெப்ரவரி - 2010

தொடர்புகட்கு:-
F.D.S.D.S
70, SQUARE DES BAUVES
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

எமது மதிப்பிற்குரிய “வடு“ வாசகர்களுக்கு.

கிட்டத்தட்ட ஒரு வருடங்களுக்குமேலாக எமது பத்திரிகை தொடர்ந்து வெளிவரவில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும், பிரதான காரணமாக இருந்தது பொருளாதாரமே. தொடர்ந்து 30 வருடங்களுக்கு மேலாக எமது சமூகத்தில் நிலவிவந்த யுத்தம், கொலைகள், ஆள்கடத்தல் ஜனநாயக மறுப்பு போன்ற சூழல் அகற்றப்பட்டுவிட்டது. யுத்தமே தனது இருப்பிற்கான மூலகாரணம் என செயல்பட்டு வந்த “புலிகள்“ இல்லாத சமூகத்தில் மக்களின் சுதந்திரமான, மகிழ்ச்சியான வாழ்க்கையை எம்மால் காணக்கூடியதாக உள்ளது.

இருப்பினும் “சுதந்திரம்“ என்பதன் அர்த்தம் பற்றி நாம் தொடர்ந்து கேள்வி எழுப்பவேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம். எமது தேசத்தில் யுத்தம் இல்லாத சூழலினாலோ, தமிழினத்தின் பெயரில் பெறப்படும் அரசியல் உரிமைகளூடாகவோ நாம் சுதந்திரத்தை பெற்றவர்கள் என களிப்படைந்துவிட முடியாதுள்ளது. எமது சமூகம் என்பது சாதிய வகையில் பிரிக்கப்பட்டுக்கிடக்கிறது. இந்த சாதியப்பிரச்சனையை திருப்திகரமாக தீர்ப்பது குறித்தும் எந்த வழியும் நிச்சயமாக கண்டுபிடிக்கப்படவுமில்லை. எம்முன்னோர்களான சிறுபான்மைத் தமிழர் மகாசபை போராளிகளும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராளிகளும் மேற்கொண்ட சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான பணிகள் தேங்கிக்கிடக்கிறது. அப்போராளிகளின் பணிகளை நாம் எம் தோள்களில் தாங்க வேண்டியவர்களாக உள்ளோம். இதற்காக புதிய சந்ததியினரை நாம் உள்வாங்கவேண்டி அவசியத்தையும் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

புலிகள் தமது இராட்சியத்தில் சாதியத்தை ஒழித்தவர்கள், புகலிடங்களில் சாதியம் மறைந்து கொண்டிருக்கிறது என தமது யாழ் மேலாதிக்ககருத்தியலுள் ஒழிந்திருந்து பேசியவர்கள் எவ்வளவு நிதானமாக சாதியத்தை பேணிவருகின்றார்கள் என்பதையும் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

சாதியத்திற்கு எதிரான சமூக விடுதலைப் போராட்டமானது எல்லையற்ற மிக நீண்ட பயணம் என்பதையும் நாம் அறிவோம். அத்தோடு தமிழ் சமூகத்திற்குள்ளேயே அரசியல் ரீதியாக எமக்கு மறுக்கப்பட்டுவரும் உரிமைகளுக்களை பெற்றுக்கொள்ளுவதற்கான போராட்டத்தையும் இணைத்துச் செல்லவேண்டியுள்ளது.

இன்றைய சூழலில் நாம் பல்வேறு தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமக்கு முன்பு பல இடதுசாரி கட்சிகளின் ஆதரவுகளும், எமது சமூகத்துக்கென சிறுபான்மைத் தமிழர் மாகாசபை எனும் சமூகவிடுதலை இயக்கமும், தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கமும் இருந்தன. இப்போ எமக்கென சொந்தமாக கட்சி இல்லை. ஆனால் எமது சமூகமானது இன்றைய சூழலில் அதிகாரத்தை தீர்மானிக்கக்கூடிய சக்தியாக (அதிக சனத்தொகை) உள்ளது.

இடம்பெறப்போகின்ற பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலில் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் சிறுபான்மை தமிழர் மகாசபை களமிறங்கியுள்ளமை எமக்கு பெரும் நம்பிக்கை அளிக்கின்றது. சாதிய ரீதியாகவும், பொருளாதாரம் மற்றும் சமூகரீதியாகவும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவரும் மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து சிறுபான்மைத் தமிழர் மகாசபையை ஆதரிக்க வேண்டிய தருணம் இதுவென நாம் கருதுகின்றோம். பாராளுமன்த்தில் 1970 ஆம் ஆண்டு காலத்தில் இருந்து எம்.சி.சுப்பிரமணியம் போன்ற எமது பெருந்தலைவர்கள் விட்டுச்சென்ற வரலாற்றுப் பணியை தொடர்ந்தும் முன்னெடுக்க தமிழர் மகாசபை சார்பில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களுக்கு எமது முழு ஆதரவையும் வழங்க தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய நாம் முன்வந்துள்ளோம். எமது பயணத்தில் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை நன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே ஒவ்வொரு சமூகரீதியாக ஒடுக்கப்பட்ட பிரசைகளும் அவசியமாகப் புரிந்துகொள்ள வேண்டிய தருணம் இதுவாகும்.

**எதிர்வரும் காலங்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்வோம்.**

வடிவமைப்பு - விஜி



படிப்பகம்

www.padippakam.com

# மெல்லெனத் துளிர்விடும் ஜனநாயகமும், அதனுடன் சேர்ந்த சாதியமும்.

பிரபாகரன் தமிழீழம் எடுத்துத் தருவார் அதன் மூலமாக தமது அரசியலையும், நிர்வாகத்தையும், பண்பாட்டையும், கலாசாரத்தையும் நிலைநாட்டி பெருமைப்பட்டுக்கொள்ளலாம் என்றெல்லாம் கனவுலகில் மிதந்து கொண்டிருந்த யாழ் மேலாதிக்கம் கடந்த மே பதினெட்டுடன் உடைந்து நொருங்கிப் போயின. இதனால் மீண்டும் யாழ்மேலாதிக்கத்தின் உச்சக்காலமான 1948 ஆம் ஆண்டுச் சிந்தனை மரபுக்குள் அனைவரையும் அழைத்துச்செல்ல முனைகின்றனர்.

ஆறுமுகநாவலரின் சைவமும் தமிழும் வளர்த்த பெருமைகளைக் காப்பாற்ற முனைப்பாக செயல்படுகின்றனர். சாதி ஆதிக்க வெறிபிடித்தவர்களால் மெல்ல மெல்ல வெளியே வந்து ஆறுமுகநாவலரை சைவமும் தமிழும் வளர்த்த பெருமகனாக காட்ட மறுபடியும் முனைகின்றனர். இராமநாதனை தமிழ் மக்களின் மாபெரும் கல்விமானாக காட்ட முனைகின்றனர். வழக்கம் போலவே யாழ்ப்பாண மேலாதிக்கத்தின் தமிழ்த் தேசியத்தை ஊட்டி வளர்த்த சில யாழ்ப்பாணப் பத்திரிகைகள் இப்போது ஆறுமுகநாவலரையும், இராமநாதனையும் போற்றிப் புகழ்வதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

இப்போக்கானது இப்போது துளிர்விடும் ஜனநாயகச் சூழலை பயன்படுத்தி தங்கள் நஞ்சு விதைகளை தூவும் செயலாக உள்ளது. இன்னும் ஐந்து மாதங்களின் பின் வடபகுதிகளில் உள்ள ஆலயங்களில் கொடியேற்று வைபவங்கள் ஆரம்பித்துவிடும். தங்களை தமிழ் அபிமானிகளாகவும், தமிழ்த் தேசிய பற்றாளர்களாகவும் வேடம் தரித்த பலர் மெல்ல மெல்ல தங்கள் சுயரூபத்தைக் காட்டும் காலம் வருமென சாதி ரீதியாக புறக்கணிக்கப்பட்ட பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

நான் தலித்துக்கள் வாழும் பல கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டபோது அவர்களது வாழ்க்கை நெருக்கடிகள் வார்த்தைகளால் விபரிக்கமுடியாத அளவு கொடூரமானதாகவும் துன்பகரமானதாக உள்ளதையும் அவதானிக்க முடிந்தது. அவர்கள் ஒரு நாள் பொழுதை களிப்பதென்பதே ஒரு ஜென்ம வாழ்க்கைப் போராட்டமாக உள்ளது. வேலைவாய்ப்பு கல்வி சுகாதாரம் இருப்பிடம் என்பன எல்லாமே கானல் நீராக தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் நடந்த யுத்தத்தில் முகங்கொடுக்க முடியாது வன்னியிலும் கொழும்பிலும் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் மீண்டும் யாழ்நகரில் குடியேற முற்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தை விட்டு வெளிநாடுகளில் சென்று குடிபெயர்ந்தோரும் தமது சொந்த ஊர்களிலுள்ள வீடு காணி நிலம் என்பவற்றின் மீது கரிசனை கொள்ள தொடங்கியுள்ளனர். இவர்கள் விட்டுச்சென்ற காணிகளிலும், வீடுகளிலும் வாழ்ந்து வந்த ஏழைத் தலித் குடும்பங்கள் இப்போது வீடுகளையும், காணிகளையும் விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர். பல வருடங்களாக தமது வீடுகளினதும் சொத்துக்களினதும் பாதுகாவலர்களாக பாவித்துவிட்டு இப்போது அவர்களை வெளியேறும்படி கோருவதானது மிக மோசமான மனிதாபிமானமற்ற செயலென விளங்கிக்கொள்ள மறுக்கின்றனர். அந்த ஏழைகளோ எங்கு செல்வதென தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கின்றனர்.

1980 வரை தமக்கான ஒரு தலைமைத்துவத்தைக் கொண்டிருந்த தலித் மக்கள் இப்போது அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். காலம் காலமாக தமிழ் இனவாதத்தைக் கக்கிவிட்டு பாராளுமன்றத்தை நிரப்பிவந்த தமிழ்த் தலைமை போல இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எந்தக் கொள்கை கோட்பாடுகளுமற்ற கோமாளித்தனமான அரசியலையே மேற்கொண்டு வருகின்றனர். பாம்புக்கு தலையையும், மீனுக்கு வாலையும் காட்டும் பாணியில் செயல்படுவதோடு மதில்மேல் பூனையாக அதிகார சுகபோகங்களை அனுபவிக்கும் கபட தாரிகளாக தங்களை அடையாளம் காட்டியும் வருகின்றனர்.

இவர்களே தமிழ் மக்களின் காவலர்களாக காண்பிப்பதற்கு அநேகமான தமிழ்ப் பத்திரிகைகள் முனைப்பாக செயல்பட்டுவருவதையும் காணக்கூடியதாக உள்ளது. இச்செய்திகளை உள்வாங்கும் அப்பாவித்தலித் மக்களும் இவர்களது கபட நாடகத்தில் அகப்பட்டு விடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. விளிம்பு நிலை மக்கள் இந்த விசமிகளின் உணர்ச்சி வலைகளுக்குள் வீழ்ந்து விடாமல் சுய சிந்தனையுடன் செயல்பட வேண்டும். சமூகத்தின் முற்போக்கு எண்ணம் கொண்டோர் உண்மைகளை வெளிக்கொண்டுவர முயற்சிப்பதுடன் விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்திற்காக போராடவும் முன்வரவேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தலைமைகள் சாதியப் பிரச்சனைகளைத் தீர்ப்பதாகச் சொல்லி ஒரு இராஜலிங்கத்தையும் பின்னர் ஒரு சிவநேசனையும் பாராளுமன்ற உறுப்பினராக்கி சாதிப்பிரச்சனையை தீர்த்து விட்டதாக நாடகமாடினர். ஆனால் இப்போது இருக்கும் மக்கள் தொகையின் படி குறைந்தது நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களாவது தங்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட வேண்டுமென்பதில் தலித் சமூகம் உறுதியாக இருக்க வேண்டும். இச்சந்தர்ப்பங்களை கவனத்தில் எடுக்காத பட்சத்தில் தொடர்ந்தும் இம்மக்கள் அனாதைகளாக்கப்படுவார்கள் எனவே சகல தலித்துக்களும் விளிம்பு நிலை மக்களும் ஒன்றுபடுவது அவசியமாகும்.-

--- தேவதாசன் ---

## மீண்டும் உதயமாகும் சமூக விடுதலை இயக்கம்.

தலித் சமூக மக்களின் மேன்மைக்காகவும், மீட்சிக்காகவும், ஒடுக்குமுறைக்கும், தீண்டாமைக்கும் எதிராக 1928 ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட்ட ஜோவே போல் தலைமையிலான கூலித் தொழிலாளர் சங்கமானது முற்போக்கு வாலிபர் சங்கமாகவும் பின்நாளில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையாகவும் வளர்ச்சி பெற்றது. தலித் மக்களின்



படிப்பகம்

www.padippakam.com




சகலவிதமான ஒடுக்குமுறைக்கும் மேம்பாட்டுக்கும் உழைத்து வந்த சி.பா.த. மகாசபை 1980 இல் விடுதலைப்புலிகளால் தடைசெய்யப்பட்டதுடன் மகாசபையினது சகல உடைமைகளும் புலிகளால் அபகரிக்கப்பட்டது. தலித் சமூகத்தின் உரிமைக்காக குரல் கொடுக்க எவரும் அற்ற அநாதைகளாக கிட்டத்தட்ட 30 வருடங்கள் கழிந்து போனது.

தங்கள் உள் உணர்வுகளைவெளிக்காட்ட முடியாமல் மௌனித்திருந்த தலித் சமூகப் பிரதிநிதிகள் கடந்த 13-12-2009 அன்று பலாலி வீதியிலுள்ள ஒரு வீட்டில் ஒன்று கூடினர். தோழர் இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் மகாசபையின் பழைய செயலாளர் அன்ரனி மாஸ்டர், தலித்திய இலக்கியப் படைப்பாளியான தெணியான் உட்பட மேலும் பலர் கலந்து கொண்டு தலித் சமூக விடுதலை இயக்கத்தின் அவசியம் பற்றியும் நடைமுறை பற்றியும் விரிவாக கலந்துரையாடினர்

அதன் பெறுபேறாக சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் அவசியம் உணரப்பட்டு மீண்டும் மகாசபை இயங்குவதற்கு எல்லோரும் இணைந்து செயல்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் தலைவர் தேவதாசனும் கலந்து கொண்டார். தலித் சமூக மேம்பாட்டிற்காக சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஒன்றுபட்டு போராடும் பட்சத்தில் புலம் பெயர் நாடுகளில் வசிக்கும் தலித்துக்களும் அவர்களது மேம்பாடு குறித்து அக்கறை கொண்ட சக்திகளும் அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.


'மீண்டும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை' இயங்குகின்றது என்கின்ற தகவலை யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வரும் உதயன்,வலம்புரி,தினக்குரல் ஆகிய பத்திரிகைகளுக்கு அன்ரனி மாஸ்டர் மூலமாக அனுப்பிவைக்கபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டு, மேற்படி பத்திரிகைகளுக்கு அனுப்பியும் வைக்கப்பட்டது.

## சமூக மேம்பாட்டு விழிப்புணர்வு ஒன்றுகூடல்

வேலனை மயிலாப்புலம் அறிவொளி சன சமூகநிலையத்தில் அக்கிராம மக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட சமூக மேம்பாட்டுக்கான விழிப்புணர்வு ஒன்றுகூடல் 12-12-2009 சனிக்கிழமை காலை நடைபெற்றது. இவ்வொன்று கூடல் நிகழ்வை தோழர் கோபி தலைமை தாங்கி வழிநடத்தினார். அவர் தனது உரையில் தமது சமூகம் மிகவும் பின்தள்ளப்பட்டுள்ளதெனவும் போக்குவரத்து சுகாதாரம், வீட்டு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளே இல்லாமல் மக்கள் பெரும் துன்பத்துக்குள் வாழும் அவல நிலையே தொடர்கின்றதென கூறியதோடு தமது குறைபாடு தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள் எதற்கும் இதுவரை பயன் கிட்டவில்லையென்பதாகவும் தனது வருத்தத்தை தெரிவித்தார். அடுத்ததாக ஜே.பி கந்தசாமி அவர்கள் உரையாற்றினார் கந்தசாமி அவர்கள் கடந்த காலங்களில் தலித் சமூகத்தின் விடுதலைக்காக



போராடியவர். அவர் தனது போராட்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.அத்துடன் பல்வேறு விடயங்கள் குறித்தும் அந்த ஒன்று கூடலில் விவாதிக்கப்பட்டது.



## கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர் மாநாடு -

கடந்த 11-12-2009 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டு தங்கள் எழுச்சி மாநாட்டை நடாத்தி முடித்தனர். நீண்ட காலத்திற்குப் பின்னர் இவ்வாறாக நடாத்தப்பட்ட எழுச்சி மாநாடு இதுவேயாகும். 1977 இல் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் இடதுசாரி கூட்டமைப்பைக் கொண்ட அரசு சீவல் தொழிலாளர்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட தெங்கு



படிப்பகம்

www.padippakam.com



பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் தொடர் வளர்ச்சியே பனந்தொழில் வல்லுநர் அமைப்பாக இன்று இயங்கி வருகின்றது.

ஆதிக்க சதியினரால் இழிவு தொழிலாக வர்ணிக்கப்படும் பனை,தென்னை ஏறும் தொழிலானது முழுக்க முழுக்க ஒடுக்பட்ட சாதியினர் எனச்சொல்லப்படும் ஒரு பிரிவு மக்கள் தொகையினரால் அவர்களது ஜீவனோபாயத்துக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் தொழிலாகும். இத்தொழிலானது மிகவும் ஆபத்து நிறைந்த தொழிலாகும் இத்தொழிலாளர்கள் தமது நீண்டகால அபிலாசைகள் அடங்கிய சில கோரிக்கைகளை முன்வைத்து தமது எழுச்சி மாநாட்டை நடத்தியிருந்தனர்.

இம்மாநாட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடபகுதி ஆளுனர், உட்பட யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரும் மற்றும் பல சமூக ஆய்வாளர்களும் கலந்துகொண்டனர். இம் மாநாட்டில் தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை கோசமாக முன்வைத்தனர். அவர்களின் கோசங்கள் செவிமடுக்கப்பட்டு அமைச்சரும், ஆளுநரும் அக்கோரிக்கைகள் யாவற்றையும் தாம் நிறைவேற்றித்தருவதாக வாக்குறுதி அளித்துச் சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒடுக்கப்படும் சமூகத்தின் உணர்வுக்குரலான இம்மாநாடு பற்றிய செய்திகளை யாழ்ப்பத்திரிகைகள் எதுவும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட முன்வரவில்லை என்பதை நாம் உன்னிப்பாக கவனிக்கவேண்டிய விடயமாகும்.இச்சமூக வளர்ச்சிக்கு அவர்களது ஆதரவு என்ன என்பதை இதனூடாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. தினசரிப் பத்திரிகைகளாக தொடர்ந்து வெளிவரும் பத்திரிகைகளில் ஒரு பத்திரிகை மட்டுமே சில மாநாட்டு புகைப் படங்களைப் பிரசுரித்திருந்தன.

எதுவாக இருந்தபோதும் வரும் காலங்களில் நாம் ஒடுக்கப்படும் சமூகங்களின் மேம்பாடு குறித்த வேலைத்திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்வதற்கான முயற்சிகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டும்.

மேற்படி மாநாட்டில் கீழ்காணும் பிரகடனங்கள் முன்வைக்கப்பட்டது.

1) விவசாயம், கடற்றொழில் என்பன தேசிய வளங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்று பனை, தென்னை வளங்களும் தேசிய வளமாக இருக்கவேண்டுமென பிரகடப்படுத்துகின்றோம்.



2) பனந்தொழில் வல்லுநர் சமூக, பொருளாதார, கலை, கலாச்சார விழுமியங்கள் தனித்துவமாகப் பேணப்படவேண்டுமெனப் பிரகடனப்படுத்துகின்றோம்

3) வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இயங்குகின்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பிரதேச சங்கங்கள், மாவட்ட சங்கங்கள், சம்மேளனங்கள் என்பன இவ் அமைப்பு சார்ந்த பல்லாயிரக்கணக்கான வல்லுநர்கள், அவர்கள் உறுப்பினர்கள், பண்கொள்ளப்படுவோர் உட்பட பல இலட்சத்திற்கு மேற்பட்டோரை உள்ளடக்கிய தேசிய அமைப்பாகும் என்பதனைப் பிரகடனப்படுத்துகின்றோம்.

4) பனை, தென்னை மரங்களில் இருந்து பெறப்படம் சாற்று உற்பத்தி(கள்) "மதுபானம் அல்ல" அது ஒரு பாரம்பரிய ஔடதம் என்பதனைப் பிரகடனப்படுத்துகின்றோம்.

***ஏற்பாட்டுக்குழு வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்***
***இல.52, சோமசுந்தரம் வீதி சுண்டுக்குளி***
***யாழ்ப்பாணம்.***

நம்மைப்பற்றி நாமேதான் கவலை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். நம் கையூன்றி நாமேதான் கரணம் போடவேண்டும். நமக்காக வாதாடுகிறவர்களோ, நமக்கு உதவி செய்கிறவர்களோ யாரும் இல்லை. நம்முடைய வேலை மிகக் கடினமானது. அதற்கு யாருடைய உதவியும், ஆதரவும் நமக்குக் கிடையாது. ஆனால் நாம் கடைசிவரை போராடித்தான் தீரவேண்டும். -
பெரியார்-



படிப்பகம்

www.padippakam.com

# ஆகிழுரிப்பு



- இ. இராஜேஸ்கண்ணா-

பள்ளிக்கூடத்துக்குக் கிட்ட போகப் போக எனக்குச் சரியான சந்தோசமாகக் கிடந்தது. தூரத்திலேயே 'ஸ்பீக்கர்' பாடுற சத்தம் கேட்டுது. உடம்பெல்லாம் பாரம் குறைஞ்சு பறக்கிறது போலை கிடந்தது. கெதியாப் போகவேணும்.

அப்பாவின்ர சைக்கிள் பழைய சைக்கிள். ஓட்டைச் சயிக்கிள். 'வீச்சா ஓடுங்கோ' எண்டு சொல்ல சொல்ல ஓடுறாரில்லை. அவசரம் தெரியாது அப்பாவுக்கு. சோம்பல். எப்பபார்த்தாலும் 'சிலோக் கோச்சி' மாதிரித்தான். அப்பாவின்ரை சைக்கிள் ஊந்துதான் போகும். நத்தை மாதிரி.

தன்ரை சைக்கிளின்ரை திறத்திலை சாட்டு வேறை சொல்லுவார்.

"பிள்ளை..... அவதிப்படாதையடா.... இன்னும் அரை மணித்தியாலத்துக்கு மேல கிடக்கு விளையாட்டு துவங்க."

திரும்பத் திரும்ப இதைத்தான் எத்தினை தரம் சொல்லிப் போட்டார். அவருக்கு ஒண்டுந் தெரியாது.

"ரீச்சர் எங்களை அரை மணித்தியாலத்துக்கு முன்னமே வந்திடவேணும் எண்டு சொன்னவ. அப்பதானாம் வெளிக்கிடுத்தலாம். நேரத்துக்கு வராவிட்டால் வேறை ஆளைத்தானாம் விடுவினம்."

எண்டு ரீச்சர் சொன்னதைச் சொன்னாலும் அப்பா வீச்சா ஓடுறாரில்லை.

இவ்வளவுக்கு தனுசிகாவின்ரை அப்பா அவளைக் கூட்டிவந்து விட்டிருப்பார். லாவண்ணியாவும் வந்திருப்பாள். அவையின்ரை அப்பாமார் 'மோட்டார் சைக்கிள்' வைச்சிருக்கினம். பின்னை நேரத்துக்கு வருவினம்.

தனுசி எப்படி வருவாள்?....

அவள் புதுச் சப்பாத்து வாங்கியிருப்பாள். என்ரை சப்பாத்தும் கிட்டடியிலை தான் வாங்கினது. புதுசு மாதிரித்தான்.

சட்டையில 'றோஸ்' குத்தி வந்திருப்பாள். அவளின்ரை வீட்டில 'றோஸ்' செடியள் பத்தையா நிக்குது. நானும் குத்திக் கொண்டுதான் போறன். அப்பா ஆற்ரையோ வீட்டில பத்து ரூபா குடுத்து வாங்கினவராம்.

லாவண்ணியும் அப்படித்தான் நல்ல வடிவா வெளிக்கிட்டு வருவாள்.

எல்லோரும் வந்து வெளிக்கிடத் தொடங்கியிருக்குங்கள் போலை.

போன வருசம் நான் விளையாட்டில சேரயில்லை. அப்பா 'டொனேசன்' கட்டப் பிந்திப் போச்சு. முதலாந் தவணை முடியிற நேரந்தான் நான் பள்ளிக்கூடம் போனனான். விளையாட்டுப் போட்டி எல்லாம் முடிஞ்சு போச்சு. எனக்குச் சரியான கவலை. என்ரை வகுப்பிலை மற்றப் பிள்ளையளெல்லாம் விளையாடினவையளாம். நான்தான் இல்லை. இப்ப நினைச்சாலும் அழுகை அழுகையா வருகுது.

இந்த முறை நான்தானாம் நல்லாகச் செய்யிறன் எண்டு எங்கடை ரீச்சர் சொன்னவ. மற்றவைக்கு முன்னாலை சொல்லையுக்கை எனக்கு கொஞ்சம் 'கொலர் அப்' தான்...

எங்கடை நிகழ்ச்சிதானாம் முதலில. எங்கடை ரீச்சர் சொன்னவா.

"ஏன் பிள்ளை அவதிப்படுகிறாய்?...உன்ரை நிகழ்ச்சி அது எல்லா இடமும் போலை இடைவேளைக்குத் தானே நடக்கும்."

அப்பா இப்படித்தான். எல்லாத்துக்கும் விளக்கம் சொல்லிக் கொண்டேதான் இருப்பார். அம்மா எண்டா எனக்கு நல்லாப் பிடிக்கும். எங்கடை நிகழ்ச்சிக்கு "யூனிபோம்" தைக்க பள்ளிக்கூடத்திலை ஆயிரம் ரூபா கேட்டவை. நான் அம்மாவெட்டை கேட்டன். அம்மா, தான் உண்டியல் போட்டு சேத்து வைச்ச ஐம்பது ரூபா, நூறு ரூபா தாள் காசுகளை எண்ணிக் கொண்டு பள்ளிக்கூடம் போனவா. ரீச்சரெட்டைத்தானே குடுக்கிறனெண்டு. நான் தான் வகுப்பிலையே முதல் 'யூனிபோம்' காசு குடுத்திருப்பன் போலை. லாவண்ணியின்ரை அப்பா 'பாங் மனேச்சர்' அவள் கூட எனக்குப் பிறகு தான்



படிப்பகம்

www.padippakam.com

குடுத்தவளாக்கும்.

அப்பாவின்ரை 'சிலோக் கோச்சி' ஒரு மாதிரி பள்ளிக்கூட வாசலிலை வந்து நிண்டுது.

என்ன வடிவாச் சோடிச்சுக் கிடக்குது. எங்கடை நிகழ்ச்சிக்குத் தைச்ச 'யூனிபோம்' நிறத்திலை 'டிசைனாக'

வாசலைச் சோடிச்சிருக்கினம். எங்கடை பள்ளிக்கூட 'ரை' யின்ரை நிறத்திலை தான் வாசலிலை இருந்து விளையாட்டு நடக்கிற வெட்டை வரைக்கும் மாலையள்கட்டிச் சோடிச்சுக் கிடக்கு

எங்கடை பள்ளிக்கூட வாசலிலை ரண்டு பக்கமும் நிக்கிற உச்சாரத்துக்கு வளர்ந்திருக்கிற பெரிய மரங்களுக்குக் கீழை அப்பா சைக்கிள் விட்டுட்டு வரப் போறார்.

அப்பாவைப் பார்த்துக் காத்துக் கொண்டு நிக்க மனம் வரயில்லை. மனம் என்னை ஓடச் சொல்லிச் சொல்லுது. 'ஐஸ்கிறீம்' வானும் நிக்குது. பிறகும் வாங்கலாந் தானே. நான் துள்ளிக் குதிச்சு ஓடினன். ஒரு ஓட்டத்திலை 'ஹவுஸ்' கொட்டிலுக்கே ஓடிவிட்டன்.

ரீச்சர் என்னைக் கண்டிட்டு சிரிச்சா. "கெட்டிக்காரி நேரத்துக்கு வந்திட்டா. நில்லுங்கோ கொஞ்சநேரம் போனாப் பிறகு வெளிக்கிடுவம். இன்ரவலுக்குத் தானே நிகழ்ச்சி." அப்பா சொன்னது சரிதான். எங்கடை நிகழ்ச்சி 'இன்ரோவலுக்கு' தானாம். இப்பதான் ரீச்சர் உண்மையைச் சொல்லுறா.

ச்சே... எவ்வளவு வடிவான 'யூனிபோம்' எப்பதான் ரீச்சர் போட்டு வெளிக்கிடுத்தி விடுவாவோ. அந்தரமாக் கிடக்கு.

நான் 'யூனிபோமை' போட்டுக் கொண்டு 'வெட்டையிலை' ஆடியாடிப் போக தூரத்திலை நிக்கிற அப்பாவுக்கு கண்ணுக்குத் தெரியுமோ தெரியாது. ஆரெண்டு யோசிப்பார். குறைக்கு முகமெல்லாம் 'ரோஸ் பவுடரும்' பூசி விடுவினம். அப்பா என்னை மட்டுக்கட்டமாட்டார். எண்டு தான் நினைக்கிறன்.

'வெட்டையிலை' பெரிய அக்காமாரின்ரை ஓட்டங்கள் நடக்குது. எல்லோரும் கத்துகினம் ஓடுறவையளோடு சேர்ந்து தாங்களும் ஓடப் பாக்கினம். 'ஹவுஸ்' களின்ரை பேரையும், நிறங்களையும் சொல்லிக் கத்துகினம்.

எனக்கு அதைப் பார்க்க விருப்பமில்லை. நெஞ்செல்லாம் படபடத்துத் துடிக்குது.

ரீச்சரும் முன்னுக்குப் போய் நிண்டு துள்ளித் துள்ளிக்கத்துறா. எங்களை வெளிக்கிடுத்தி விடாமல்.

தரணி, லாவண்ணி, ஹம்சா, தனுசி எண்டு எல்லாரும் ஆயத்தமாகத் தான் நிக்கிறம்.

உப்பிடி வெளிக்கிடுத்தாமல் நிண்டால் என்ன மாதிரி?.... திடீரெண்டு கூப்பிட்டுவிட்டால் என்னெண்டு போறது?....

அம்மாவை வரச் சொல்லிக் கேட்டனான். அம்மா வரையில்லை. எங்கை வரச்சொன்னாலும் வெட்கப்படுவா. 'காதிலை கழுத்திலை ஒண்டும் இல்லாமல்' எண்டு ஏதோ அப்பாவுக்குச் சொல்லுவா. உப்பிடித்தான் போன மாதம் எங்கடை ஊர் கோயில் திருவிழாவுக்குக் கூட வரமாட்டன் எண்டிட்டா.

தரணியின்ரை அம்மாவும் வரவில்லைத்தான். ஆனால் ஹம்சாவின்ரை அம்மா வந்தவ அவளை வெளிக்கிடுத்தவாம். எனக்கென்ன எங்கடை ரீச்சர் இருக்கிறா தானே. அவவும் அம்மா மாதிரித்தானே. என்னிலை நல்ல பட்சம்.

முட்டைக்கண்ணி மகிசாவும் தாயோடை வந்து நிக்கிறாள். அவள் ஒரு நாலைஞ்சு நாள் எங்களோட பயிற்சி எடுத்தவள். பிறகு சரியாகச் செய்யிறா இல்லை எண்டு எங்கடை ரீச்சர் நிற்பாட்டிட்டா. அது கலியாணி ரீச்சருக்குப் பிடிக்கயில்லை. முட்டை கண்ணியை மட்டுமில்லை வேறையும் மூண்டு பேரையும் தான் நிற்பாட்டியாச்சு. முட்டைகண்ணிக்கு பெரிய 'லெவல்' எங்களோடை எல்லாம் சேரமாட்டா. நடப்புக் காட்டுவா. தகப்பன் டொக்டராம். அவ பெரிய இவ.



"ஏய்... முட்டைகண்ணியின்ரை தாய் அங்கை பாரன் 'பீ' வகுப்பு கலியாணி ரீச்சரோடை பின்னாலையும் முன்னாலையும் இழுபடுறா" லாவண்ணிதான் எனக்கும் சொன்னாள். முட்டைக்கண்ணி மகிசா 'பீ' வகுப்பு நாங்கள் 'ஏ' வகுப்பு. இரண்டு வகுப்பையும் கலந்துதான் எங்கடை நிகழ்ச்சி.

"இஞ்சை... ஏய்.... அங்கை பாரன் முட்டைக் கண்ணியின்ரை தாயும் கலியாணி ரீச்சரும் எங்கடை ரீச்சரை தனியாக் கூட்டிக் கொண்டுபோய் ஏதோ குசுகுசுக்கினம். பின்னாலை வாத்து முட்டைக் கண்ணியும் நிக்கிறாள்."

லாவண்ணியும் எங்களோடை சேர்ந்து கொண்டு சொல்லுறாள்.

"ஏய்... முட்டைக் கண்ணியின்ரை அம்மாவும் ரீச்சர் வேலை தான். வேறை எங்கையோ படிப்பிக்கிறா.



படிப்பகம்

www.padippakam.com

கலியாணி ரீச்சர், எங்கடை ரீச்சர் எல்லோரையும் தெரிஞ்சிருக்கும். அதுதான் கதைக்கினம் போல"

நான் அவையின்ரை கதையளை மறிச்சு சொன்னன். சரியெண்டு தலை ஆட்டுகினம்.

லாவண்ணியின்ரை அப்பா 'பாங்க் மனேச்சர்', தரணியின்ரை அப்பா 'மாஸ்டர், ஹம்சாவின்ரை அப்பா 'கிளாக்கர்', தனுசியின்ரை அப்பா எங்கடை பள்ளிக் கூடத்திலை பெரிய அக்காமாருக்கு படிப்பிக்கிற 'சேர்'. எல்லோரும் வந்திருப்பினம்.

எட்டிப் பார்த்தன். அங்காலை வெளியாக்கள் நிக்கிற பக்கமாக அப்பா நிக்கிறார். ஆசையா என்ரை நிகழ்ச்சியை பார்க்க முன்னுக்கு வந்து நிக்கிறார். அடிக்கடி என்ரை 'ஹவுஸ்' இருக்கிற பக்கமும் பார்க்கிறார். நான் நிக்கிறது தெரியேல்லைப் போலை கிடக்கு. தூரந்தானே.

'இன்ரோவல்' நிகழ்ச்சியிலை நல்ல வடிவா ஆடவேணும். அது பாட்டுக்கு 'டான்ஸ்' தானே. இடைக்கிடை பரத நாட்டியம் மாதிரியும் சொல்லித் தந்தவை. எனக்கு நல்ல விருப்பமான ஆட்டம் அதுதான்.

அப்பா ஆக்களுக்குள்ளாலை எட்டி எட்டிப் பார்க்கிறார். என்னைத் தான் போலை.

என்ரை நிகழ்ச்சி முடிய அப்பாட்டை ஒடிப் போவம். என்ரை யூனிபோமையும், வெளிக்கிட்ட வடிவையும் பாத்திட்டுச் சந்தோசப்படுவார். உடனை ஆளைக் கொண்டு ஒரு 'கோண் ஐஸ்கிறீம்' வாங்கி யூனிபோமிலை ஊத்திப்போடாமல் குடிக்கவேணும்.

"ஏய்... .ரீச்சர் எல்லோரையும் கூப்பிடுறா...வெளிக்கிட வரட்டாம். வாங்கோ... நேரம் கிட்ட வந்திட்டுதாம்."

தரணிதான் கூப்பிட்டாள். எல்லோரும் போறம். ஐயோ...நேரம் வந்திட்டுது. எனக்கு உடம்பெல்லாம் சூடேறுது மாதிரிக்கிடக்குது. மேகத்திலை பறக்கிற மாதிரிக் கிடக்கு. சப்பாத்துப் போட்டாச்சு. தலை வடிவாக் கட்டிக் கொண்டு தான் வந்தனான். குழம்பினாலும் தொப்பிபோட மறைக்குந்தானே. இனி என்ன நிகழ்ச்சிக்கெண்டு தைச்சு, முதல் போட்டுப் பார்த்த 'யூனிபோம்' தானே போடக் கிடக்கு. அது எனக்கு நல்ல அளவு, வடிவு. அதைப் போட்டால் சரி பிறகு கை ரண்டிலும் கலர் கலரா குஞ்சங் கட்டுறது. அவ்வளவு தான்.

வெளிக்கிடுற இடத்திலே முட்டைக் கண்ணியின்ரை தாய் நிக்கிறா. பிறகும் ஏதோ கல்யாணி ரீச்சரரோடை குசுகுசுக்கிறா.

எங்கடை ரீச்சர் எனக்கு 'யூனிபோம்' போட்டு விடுறா. என்னைப் பார்த்து ஏதோ கதைக்கினம். எனக்கு 'யூனிபோம்' வடிவாகக் கிடக்குப் போலை. அதைத்தான் கதைக்கினமாக்கும்.

எட்டிப் பார்க்கிறன் அப்பாவை சின்னனாத் தெரியுது. இப்படியே பார்த்தால் அப்பா என்னைத் தூக்கிக் கொஞ்சுவார். முடிஞ்சாப் பிறகு போறது தானே.

எங்கடை ரீச்சர் தனியாத்தான் எல்லாஞ் செய்யுறா. பாவம் கலியாணி ரீச்சர் உதவி செய்யிறா இல்லை. அவ அவையோடை கதைச்சுக் கொண்டே நிக்கிறா. முட்டைக்கண்ணி மகிசா என்னைத் தான் பாக்கிற மாதிரிக் கிடக்கு சிரிக்கிறா இல்லை.

"எல்லோரும் உப்பிடியே குழப்பாமல் நிக்க வேணும் ரீச்சர் முன்னுக்கு நிப்பன். 'லைன்' பண்ணி நில்லுங்கோ. நான் விசில் ஊதிப்போட்டு கையைக் காட்டுவன். நீங்கள் துள்ளித்துள்ளி ஓடி 'கிறவுண்ட்' க்குள்ள போக வேணும் என்ன?...."

ரீச்சர் தான் சொல்லிப்போட்டு வெளியிலை போட்டா. நாங்கள் எல்லோரும் வண்ணாத்திப் பூச்சியள் மாதிரி கையிலை கட்டின குஞ்சங்களை அசைச்சுப் பார்த்துக் கொண்டு நிக்கிறம்.

திடீரெண்டு என்னை ஆரோ பிடிச்சு இழுக்கினம். கலியாணி ரீச்சர் தான் மறைவிலை கொண்டுபோய் மளமளவெண்டு என்ரை தொப்பியையும், யூனிபோமையும் கழட்டுறா. முட்டைக்கண்ணிக்கு அதைப் போடுகினம். அவளின்ரை தாயும் சேர்ந்து தான். எனக்கு எங்கடை ரீச்சரைக் கூப்பிட வேணும் போலை கிடக்கு. ஆனால் முடியேல்லை. குரல் வருதில்லை. மகிசாவிக்கு முகமெல்லாம் 'றோஸ்' பவுடர் அப்புகினம் முட்டைக்கண்ணி சிரிக்கிறாள்.



எனக்கு அழுகை வருது உள்ளுக்கை போடுற 'பெற்றிக் கோட்' டோடை நிக்கிறன் எல்லாப் பிள்ளையளும் பார்க்கிற மாதிரிக் கிடக்கு. வெக்கமாகக் கிடக்கு.

"உது உந்தக் கிழக்கு றோட்டில இருக்கிற பிள்ளை. இங்கத்தை ஆக்களில்லை. அவவின்ரை 'கிளாஸ்' ரீச்சரின்ரை செல்லம். தாய் யூனிபோமுக்கு அரைவாசிக் காசுதான் தந்தவ. மிச்சம் பிறகாம். அதுகள் உப்படித்தான். ஆக்களைத் தெரியுந்தானே உனக்கு. இதுகளுக்கு ஏன் இதெல்லாம்? உவை வந்து இஞ்சை ஒண்டும் நியாயம் கேட்டுப் படைக்கப் போறது இல்லை."



படிப்பகம்

www.padippakam.com



முட்டைக் கண்ணியின்ரை தாய்க்குச் சொல்லிக் கொண்டே முட்டைக்கண்ணியை 'லைனிலே' இடையிலை செருகி விடுறா கலியாணி ரீச்சர்.

தனுசி, தரணி, லாவண்ணி எல்லோரும் என்னைக் கவலையோட பாக்குதுகள்.

எனக்கு அழுகை வந்தது. கண்ணை கண்ணீர் மறைச்சுக் கொண்டு நிறைஞ்சு வந்தது.

ரீச்சர் விசில் ஊதுறது அடைச்ச காதுக்குள்ளை கேக்கிறது மாதிரிக் கேட்குது. தலையெல்லாம் சுத்திற மாதிரிக் கிடக்கு.

எல்லாரோடையும் சேர்ந்து முட்டைகண்ணியும் துள்ளிக் கொண்டு ஓடுறாள். ரீச்சரும் கவனிக்கேல்லைப் போலை.

நான் அழுகிறன். கண்ணீர் வருது. என்ர வடிவான யூனிபோமை மாத்திப் போட்டிட்டினம். எங்கடை ரீச்சருக்கு சொல்லி அழ வேணும் போலை கிடக்கு. வெளியிலை போக வெட்கமாகக் கிடக்கு. 'பெற்றிக்கோட்டுக்' குள்ளாலை 'நிக்கர்' தெரியுது. சப்பாத்தோடையும் பெற்றிக் கோட்டோடையும் எப்படி வெளியிலை போறது. வெள்ளைச் சட்டையையும் ரீச்சர் வாங்கி உள்ளுக்கை வைச்சிட்டா.

'ஸ்பீக்கரிலை' எங்கடை 'இன்ரோவல்' நிகழ்ச்சிப் பாட்டுக் கேக்குது. அப்பா என்னை தேடித் தேடிப் பார்ப்பார்.

நானும் எட்டி எட்டிப் பாக்கிறன். அப்பாவை இப்ப தெரியல்லை. எல்லோரும் 'இன்ரோவல்' நிகழ்ச்சி பாக்கிறதுக்கு முன்னுக்கு திரண்டு குவிஞ்சு கொண்டு நிக்கினம்.

என்னைக் கவனிக்கினமில்லை.

நான் அழுது கொண்டே நிக்கிறன். பாட்டு கேட்க கேட்க இன்னும் நல்லாத் தலை சுத்துற மாதிரிக் கிடக்கு.

கண்ணுக்குள்ளை நிண்ட கண்ணீருக்குள்ளாலை அப்பா கலங்கலாகத் தெரியிறார். அப்பா தான். என்னைத் தேடி வந்திட்டார்.... என்னைக் கண்டவுடன் அவருக்கு கண் கலங்கியது.

என்ன நடந்ததெண்டு கேட்கிறார். நானும் அழுதழுது சொல்லுறுன்.

என்னைத் தூக்கி தோளிலை போட்டார். "வாடா செல்லத்துக்கு ஐஸ்கிறீம் வாங்கித் தாறன்" எண்டு என்ரை மனசை மாத்தப் பாக்கிறார். எனக்கு ஒண்டும் தேவையில்லை எண்டு சொல்லி அழுறன்.

அப்பா என்னை வெளியிலை கொண்டு போறார். வெளியிலை சோடிச்சுக் கிடக்கிறதெல்லாம் என்ரை கண்ணீருக்கை கரையிற மாதிரி கிடக்கு. வாசலிலை ரண்டு பக்கமும் நிக்கிற பெரிய மரங்கள் என்ரை தலையிலை விழுற மாதிரிக் கிடக்குது.

அப்பா என்னைத் தன்ரை சைக்கிளிலை ஏத்தி இருத்திறார்.

கைதட்டிக் கேக்குது 'இன்ரோவல்' நிகழ்ச்சி முடிஞ்சுது போலை.

அப்பா சைக்கிளிலை ஏறி உழக்கத் தொடங்கிறார்.

எங்கடை ரீச்சர் வாசல் வரைக்கும் ஓடி வாறா. என்ரை பேரைச் சொல்லிக் கூப்பிடிற மாதிரிக் கிடக்குது.

அப்பா திரும்பிப் பார்க்காமல் ஓடிக் கொண்டு போறார். பாவம்...ரீச்சர் என்னோடை கதைக்கத்தான் வந்திருப்பா போல.

தமிழனுக்கு இன்றுள்ள வேலையெல்லாம் சாதி ஒழிப்பிற்கு, அதற்கு ஆதாரமான, அதற்கான நம் எதிரிகள் பயன்படுத்துகிற எல்லாச் சாதனங்களையும் இருந்துவருகிற எல்லா அறிகுறிகளையும் பலவீனமாக்குவதும், ஒழிப்பதுமான காரியமேயாகும்.

-பெரியார்-



படிப்பகம்

www.padippakam.com

**தீண்டாமைக் கொடுரங்களும் தீ மூண்டநாட்களும் எனும் தலைப்பில் தோழர் யோகரட்ணம் அவர்களின் நினைவுக்குறிப்புகள் தொடராக 7 கட்டுரைகள் கடந்த "வடு" பத்திரிகையில் வெளிவந்தது. அதனது தொடச்சியாக வே 8ஆவது தொடராக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது. வாசகர்களுக்கு சிரமாக இருக்கும் என்பதை நாம் உணர்கின்றோம் இருப்பினும் தோழர் யோகரட்ணத்தின் இத்தொடர் கட்டுரை விரைவில் நூலாகவும் வெளிவர உள்ளதென்பதையும் வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும். முன்னைய தொடர்ச்சிகளை THUUU.NET இணையத்தில் பார்வையிடலாம்**

- யோகரெட்ணம் -



# தீண்டாமைக் கொடுரங்களும் தீ மூண்ட நாட்களும்

## நினைவுக் குறிப்புகள் - 08

ஊரிலிருந்து மாதா மாதம் கடிதம் வரும். நானும் எனது சுகத்தையும் படிப்பையும் எனது தமிழ் - சிங்கள நண்பர்களினது சுக துக்கங்களையும் எனது வீட்டாருக்கும் எனது ஊர் நண்பர்களுக்கும் தெரியப்படுத்துவேன். அக்காலங்களில் குடாநாட்டின் கலவர (சாதிக் கலவரம்) நிலமைகளையும் கேட்டு எழுதுவேன். அது போல மற்ற நண்பர்களும் தமது பெற்றோர்க்கும் நண்பர்களுக்கும் கடிதம் எழுதுவார்கள். எல்லோருக்கும் பதில் கடிதங்கள் வரும் நாட்களில் அனைவரும் கூடி செய்திகளை பரிமாறிக்கொள்வோம். புலேந்திரனுக்கு வந்த கடிதம் கொண்டுவந்த செய்தி எமக்கு மிக வேதனையைத்தந்தது. அச்செய்தி இதுதான்: யாழ்நகரில் நடைபெறும் தினகரன் விளையாட்டு விழாவில் சயிக்கிள் ஓட்டப் போட்டியில் தொடர்ச்சியாக வெற்றி பெறுபவர் மகேந்திரன் எனும் தலித் சமூகத்தைச் சேர்ந்த வாலிபன். இந்த முறையும் மகேந்திரன் கலந்துகொண்டு வெற்றிபெறுவதை உயர்சாதியினர் விரும்பவில்லை. எனவே மகேந்திரனை தோற்கடிக்க பல சதி முயற்சிகளை மேற்கொண்டனர் உயர்சாதி வெறியினர். ஓட்ட வீரர்களுக்கு தண்ணீர் ஊற்றி உற்சாகப்படுத்துவதுபோல் வாளியால் அடிக்க முனைந்திருக்கின்றனர். அதுமட்டுமல்லாது பிற உயர்சாதி சயிக்கிள் ஓட்ட வீரர்கள் சயிக்கிளோடு சயிக்கிளை சொருகி மகேந்திரனை விழுத்தவும் முனைந்துள்ளனர். இருப்பினும் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் மகேந்திரனே முதலாவது இடத்தை கைப்பற்றிக்கொண்டார். இந்த விபரங்களே புலேந்திரனின் கடிதத்தில் வந்த செய்தியாகும். இதை வாசித்துக்காட்டிவிட்டு "மச்சான் யாழ்ப்பாணத்தான்ர சாதிவெறியை ஒழிக்கமுடியாதுபோனால் சிறுபான்மைச் சமூகம் அத்தனைபேரும் நாம் பௌத்தர்களாக மாறுவதைத் தவிர வேறு வழி இல்லை." என்றான் கோபத்துடன்.

இக்காலப்பகுதியில் எனது வீட்டில் இருந்தும் ஒரு கடிதம் சோகமான செய்தியொன்றைக் காவி வந்தது. அதில் சண்டிலிப்பாய் வடக்கு மடத்தடியில் பதின்நான்கு வீடுகளை சாதிவெறியர்கள் தீயிட்டு கொழுத்திவிட்டதாகவும் அத்தீயில் வயோதிபர் வைத்தியன் என்பவர் அகப்பட்டு உடல் கருகி இறந்து விட்டதாகவும். அதனால் அம்மக்கள் வேறு இடங்களில் உடுத்த உடுப்புடன் இடம்பெயர்ந்து இருப்பதாகவும் தொடர்ந்தும் நிலமை மோசமாகவே இருக்கிறது என்பதாகவும். அத்தோடு பன்றித் தலைச்சி அம்மன் கோயில் பொங்கல் அன்று நடந்த சண்டையில் ஒரு பெண் (செல்லக்கிளி) குண்டு எறிந்து தாக்கியதாகவும் தகவல். இப்படியாக நாட்டு நடப்புச் செய்திகளையும் கொண்ட கடிதமாக அது இருந்தது. எனக்கு வந்த கடிதத்தை மற்ற நண்பர்களிடம் வாசித்துக் காட்டினேன். கோபம், இயலாமை எனும் உணர்வுகள் எம் எல்லோர் முகத்திலும் தோன்றிச் சிவந்தது. சில வினாடி மௌனத்தின் பின் நாம் லீவு கேட்டு ஊர் சென்றுவர முடிவு செய்தோம். சுவாமியிடம் (தேரரிடம்) விபரத்தை கூறாமல் எமக்கு வீடு போய்வர லீவு கேட்டோம். எமக்கு



படிப்பகம்

www.padippakam.com

எமது விருப்பப்படி லீவு தந்ததுடன் பயணச்செலவும், பத்தேகமவிலிருந்து காலிவரை செல்ல தனது காரையும் தந்து உதவினார்.

நாம் ஊர்வந்து சேர்ந்ததும் ஐவரும் அவரவர் வீடு சென்றோம். நான் மறுநாள் மடத்தடிக்கு சென்றபோது சுடுகாட்டுக்குள் நுழையும் பிரமை ஏற்பட்டது. மடத்தடி சந்தியிலிருந்த முருகன் வீட்டில் இருந்து கண்ணப்பு வீடு வரை கிட்டத்தட்ட 14 வீடுகள் எரிந்து கரிகிச் சாம்பலாகிக் கிடந்தது. கண்ணப்பு, இராசதுரை, அண்ணாமலை (நாகமணி), நடராசா போன்றவர்களை சந்திக்க முடிந்தது. அண்ணாமலை மனைவி பிள்ளைகளை அயலில் உள்ள தனது சகோதரர்களின் வீட்டில் தங்க வைத்துள்ளதாக கூறினார். ஏனையோர் வேறு கிராமங்களுக்கு சென்றுவிட்டார்கள். எல்லோர் முகத்திலும் பயமும் கவலையும் தெரிந்தது.

ஆனால் இளம் தலைமுறையினர் மிகவும் கோபத்தோடும் ஆக்ரோசமாகவும் உலாவந்தனர். நான் பின்னர் நவசக்தி சனசமூக நிலையத்திற்கு சென்றேன். அங்கு ஏராளமான வாலிபர்கள் ஒன்று கூடி இருந்தனர். அவர்களில் என்னுடன் பழக்கமான சிலரிடம் நடந்த விபரங்களை கேட்டறிந்துகொண்டேன். விபரம் இதுதான்: சங்கானை நிற்சாமத்தில் நீறுபூத்துக் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை அடக்குவதற்கு ஒருவர் முயற்சி எடுத்துள்ளார். அவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து போராட்டத்தை அடக்க முற்பட்டவர். சாதியமேலாதிக்க வெறியர்களின் தலைவனாகவும் அவர் இருந்திருக்கிறார்.

இவரை நன்கு அடையாளம் கண்டு கொண்ட நிச்சாம போராட்ட இளைஞர்கள் இவரைத் தீர்த்துக்கட்ட திட்டம் போட்டனர். அதற்காக அவரின் நடமாட்டத்தை உளவு பார்த்தனர் நிச்சாம போராளிகள். அவர் ஒவ்வொரு நாளும் மாலை 6.30 மணிக்கும், 7.30 மணிக்கும் மது அருந்துவதற்காக சண்டிலிப்பாய் மடத்தடிக்கு வருவதாகவும், பிற்பாடு நல்ல போதையில் 8.30க்கும் 9.30 க்கும் இடையில் திரும்புவதாகவும் கச்சிதமாக தகவலை திரட்டிக் கொண்டனர். நேரமும் நெருங்கியது நிச்சாமப் போராளிகள் துப்பாக்கியுடன் பதுங்கியிருந்தனர். எதிர்பார்த்தபடி அந்த உருவத்தையும் கண்டு கொண்டனர். போராளி ஒருவரிடம் இருந்த துப்பாக்கியிலிருந்து சீறிப்பாய்ந்த தோட்டா அவ்வுருவத்தை துளைத்து வீழ்த்தியது.

பிற்பாடுதான் தெரிந்து கொண்டனர் தாம் சுட்டு வீழ்த்தியது தாம் இலக்குவைத்த அந்த சாதிவெறியன் அல்ல என்பது. அவர்கள் எதிர்பார்த்த இடத்துக்கு இரண்டுபேர் வந்திருக்கின்றார்கள் இரண்டு பேரும் உருவ ஒற்றுமையிலும் மிக நெருக்கமாகவும் இருந்துள்ளனர். நிச்சாமப் போராளிகளின் இலக்குக் குள்ளானவர் தாம் எதிர்பார்த்தவரின் நண்பர் என்பதை அவர்கள் பிற்பாடே அறிந்துகொண்டார்கள். துப்பாக்கிச் சூடுபட்டவரும் இறந்துவிட்டார். இந்தச் சம்பவத்தின் பின்னணியே சாதிவெறியர்கள் சண்டிலிப்பாய் மடத்தடிக் கிராமத்திலுள்ள குடிசைகளுக்கு நெருப்பு வைக்கக் காரணமும் ஆனது. அதுவும் அதிகாலை 2.30 அல்லது 3 மணிபோல அது நடந்தது என்பதாகவும் அவர்கள் நடந்த சம்பவத்தை என்னிடம் கூறினர்.

1970 ம் ஆண்டுக்குப் பின்னர் நான் நவசக்தி சனசமூக நிலையத்தின் உறுப்பினராக சேர்ந்துகொண்டேன். காலப்போக்கில் மேற்படி சனசமூக நிலைய உபதலைவராகவும், பின்னர் செயலாளராகவும் சில ஆண்டுகள் பணி புரிந்தேன். இக்காலத்தில் நவசக்தி சனசமூக நிலையத்துக்கு அரச அங்கீகாரம் கிடைத்ததோடு, சிறியளவு அரச நிதி உதவியும் கிடைத்தது. என்னுடன் திரு.நா.கந்தையா, பி.கண்ணப்பு, வி.நடராசா, இரத்தினம் (ஆசிரியர்), க.இராசரத்தினம், க.இராசதுரை, காலம் சென்ற கனகராசா செல்வரத்தினம், மயில்வாகனம் போன்ற முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் இச்சனசமூக நிலையத்தில் பொறுப்பு மிக்க பதவிகளை வகித்து வந்தனர். என்பது பதிவு செய்யப்பட வேண்டிய வரலாறாகும். நவசக்தி சனசமூக நிலையத்தின் தலைவராக திரு.நா.கந்தையா அவர்கள் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

-தொடரும்-

சமூக சீர்திருத்தம் என்ற பெயரால் இங்கும் அங்கும் ஏதோ மாறுதல்களைச் செய்வதோ, ஒட்டுவேலை - மேல்பூச்சு வேலை செய்வதோ பயன்தராது. இன்றைய சமூதாய அமைப்பையே அடியுடன் ஒழித்துவிட்டு புதியதொரு சமூதாய அமைப்பை, சாதியற்ற, உயர்வு-தாழ்வு அற்ற சமூதாய அமைப்பை உருவாக்க வேண்டும்.

\- பெரியார் -



படிப்பகம்

# பனை தென்னை வள அபிவிருத்தி நிறுவனங்களின் தோற்றமும் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களும்.



இ.இராஜேஸ்கண்ணா -விரிவுரையாளர் சமூகவியல்துறை -யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

ஒரு குறித்த மக்கள் தொகுதியின் சமூகமாற்றம் என்பது பல்வேறு அம்சங்களால் சாத்தியமாகின்றது. குறித்த சமூகத்தின் உள்ளார்ந்த முரண்பாடுகள், அங்கு உருவாகும் புரட்சிகர சிந்தனைகள், பண்பாட்டுக் கூறுகளிலான மாற்றங்கள், புறநிலைச் சக்திகளின் தலையீடுகள் என்று மாற்றத்திற்கான காரணிகளை பட்டியல்படுத்திச் சொல்ல முடியும். இந்தவகையில் ஒரு சமூகத்தில் முன்னர் நிலவி வந்த அந்தச் சமூகம் எதிர்கொண்ட பிணக்குகளுக்கான தீர்வுகளாக எழுந்துள்ள "நிறுவன அமைப்பாண்மைகள்" கூட சமூக மாற்றத்தின் ஒரு நேரடி விளைவாகவும், மாறாக சமூக மாற்றத்தைத்தூண்டும் பிரதான விசைகளாகவும் தொழிற்படுவதைக் காணலாம்.

இந்த வகையில் ப.தெ. வள அபிவிருத்தி நிறுவனங்களின் தோற்றம் என்பது ஒரு குறித்த சமூகப்பிரிவினரின் சமூகத்தேவைகள், சமூகம் சார்பிரச்சனைகள், சமூக அடையாளம் என்ற அடிப்படைகளில் உருவான ஒரு அமைப்பாண்மையாகும். இந்த அமைப்பாண்மையின் உருவாக்கத்துக்கு முன்னர் அதன் தேவை தொடர்பான ஒரு 'சமூகத் தாகம்' ஏற்பட்டமையும், தோற்றத்தின் பின்னர் அத்தாகம் எவ்வாறு நீக்கப்பட்டது என்பது பற்றியும் சிந்திக்கும் போதுதான் இவ் அபிவிருத்தி நிறுவனங்கள் சமூகமாற்றத்தில் பெறும் இடத்தினை விளங்கிக்கொள்ளமுடியும்.

இருந்து வந்த யாழ்ப்பாண சமூகத்தின் சாதிய இறுக்கம் கொண்ட சமூகக்கட்டமைப்பிலே சாதியடையாளத்துடன் பார்க்கப்பட்ட பனந்தொழில் வல்லுனர்களின் வாழ்க்கை மாற்றம் சமூக நிலைகளை உயர்த்துதல் என்ற மாற்றுச் சிந்தனையின் விளைபொருளே ப.தெ.வள அபிவிருத்தி நிறுவனங்கள் என்பது ஒன்று. இந்த நிறுவனங்கள் தோன்றிய பின்னர் அதன் இலக்குகளை ஓரளவேனும் பூரணமாக எய்தியதா? அதனால் விளைந்த அடிப்படை மாற்றங்கள் தான் என்ன? குறித்த சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், அரசியல் பிரதிநிதித்துவம் பங்குபற்றலும், சிந்தனைமுறையிலான மாற்றம், தொழில் நுட்ப புதுமைகளின் உள்வாங்கல் எந்தளவில் உள்ளன? என்று நோக்குவது இன்னொன்று . இந்த இரு அடிப்படை மாற்றங்களையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

## ப.தெ.வள அபிவிருத்தி நிறுவனங்களின் தோற்றம்.

இலங்கையின் தவிர்க்க முடியாத வளங்களாக விளங்கும் பனை, தென்னை வளங்களையும், அவற்றைச் சார்ந்த தொழில் வல்லுனர்களையும் தேசிய உற்பத்தியினுள் உள்வாங்கும் ஒரு செயற்பாடாக இந்த நிறுவனங்கள் தோன்றின. இது இரு பிரதானமான நிறுவனத் தளங்களைக் கொண்டுள்ளது.

1. சட்ட பூர்வமாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட நியதிச்சபையான பனை அபிவிருத்திச்சபை'

2. வடக்கு கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை , மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் அரசாங்கப் பிரதிநிதியான கூட்டுறவு ஆணையாளரின் வழிகாட்டலில்



படிப்பகம்

www.padippakam.com

அங்கத்தவர்களிலிருந்து நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டு உருவான 'பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.'.

இந்த ஆய்வு இரண்டாவது அமைப்பினான குவிமையப்படுத்தியதாகவே அமைகின்றது. இரண்டாவது அமைப்பினுள் அமுங்கும் சமூகங்கள் ஒன்று சேர்ந்து 'கொத்தணி', 'இணையம் போன்ற கூட்டுறவு அமைப்புகள், வடிசாலைகளை அமைத்து பணியாற்றின. யாழ் மாவட்டத்தின் சங்கங்கள் இணைந்து வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உருவாகியுள்ளது. வடக்கு கிழக்கு சங்கங்களை ஒன்றிணைக்கும் வடக்கு கிழக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையம் தொழிற்படுத்தப்பட்டது.

இவையாவற்றுக்குமான தொடக்கமாக 1972 ஆம் ஆண்டில் நிதியமைச்சராக இருந்த கலாநிதி என்.எம்.பெரேரா விளங்கியிருந்தார். அப்போதைய வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக இவர் இவ் அமைப்பினை உருவாக்கினார். நில உரிமையற்ற பனந்தொழில் வல்லுனர்கள் பனை வளம் உள்ள நில உடைமையாளர்களால் சுரண்டப்படுவதைத் தவிர்த்தல் என்ற பிரதான இலக்குடனும் மரவரி செலுத்துதல், தவறணை முதலாளிகளின் சுரண்டலைத் தவிர்த்தல் ஆகிய நோக்கங்களுக்காகவுமே இச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. ஏறத்தாழ நான்கு தசாப்தங்களை அண்மித்து விட்ட நிலையில் இச் சங்கங்களின் படிமலர்ச்சியுடன் அவற்றின் சாதனைகளை ஒருங்கே வைத்து மதிப்பிடுவது அவசியமானதாகும். ஏனெனின் ஒரு புறத்தில் பனந்தொழில் வல்லுனர் சமூகத்தின் மாற்றத்தில் இந்நிறுவனங்களின் பங்கினைப்பார்ப்பதும், மறுபுறம் இயல்பான புறநிலைச் சமூக மாற்றத்தினுள் இச்சங்கங்களின் செயலாற்றுகையும் அதுசார்ந்த மக்கள் தொகுதியின் வாழ்நிலை மேம்பாடும் ஒருங்கே வைத்து நோக்கப்பட வேண்டிய முதன்மையான தேவையும் உள்ளது. இவ் இரு அணுகுமுறைகளின் வழியேதான் இந்த மக்கள் தொகுதியின் சமூக மாற்றத்தினை வெளிக் கொணர முடியும்.

## ப.தெ.வள அபிவிருத்தி நிறுவனங்களின் பணிகளும் சமூக மாற்றமும்

இந்த நிறுவனங்களின் தோற்றத்தினாலும், அதன் பணிகளினாலும் அதுசார்ந்த சமூகத்தில் பல அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டதனை மறுக்க முடியாது இருப்பினும் நாற்பது ஆண்டுகளைக் கொண்ட இச்சங்கங்களின் வரலாற்றுச் சாதனைதான் என்ன? அது இன்றைய சமூக வாழ்க்கை முறைகளுக்கும் சமூக இயங்கியலுக்கும் பொருத்தப்பாடு கொண்டதாக நகர்கிறதா என்ற சிந்தனைகளும், ஆய்வுகளும் அவசியமாகின்றன. இந்தவகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சிந்திக்க முடியும்.

1. உலகின் பல்வேறு சமூகங்களைப்போலவே இலங்கைத் தமிழர் சமூகத்திலும் மிக இறுக்கமான சமூக அமைப்பு நிலவி வருகின்றது. சாதியப் படிமானங்கள் அதிகமுள்ள சமூகத்தில் குறிப்பிட்ட சில சமூகப்பிரிவினர் அவர்களின் தொழில் சார்பாக வலுவாக அடையாளப்படுத்தப்பட்டே வருகின்றனர். சமூகப்பிரிவினரிடையே தொழில் குறித்த ஏற்றத் தாழ்வுகள், ஏளனப் பார்வைகள் என்பனவும் தவிர்க்கமுடியாதது. இது 'மரபுரிமை' என்ற நிலை ஆரம்பகாலங்களில் மட்டுமன்றி இன்றுவரை கருத்தாக்கங்களாக நிலை பெற்றுள்ளன. கருத்தியலுக்கு அப்பால் செயன்முறை ரீதியான சுரண்டல்கள் இருந்து வந்த தருணத்திலேதான் இச்சங்கங்கள் தோன்றின. சுரண்டல்களை எதிர் கொள்ளவேண்டிய தேவை அந்த சாதிப்பிரிவினருக்கு ஏற்பட்டது. நிலவுடைமை அமைப்பு சாதியப் பரிமாணங்களுடன் கட்டமைக்கப்பட்டதால் இத்தகைய சுரண்டலை வெற்றிகொள்ள சாதியக்கட்டமைப்பில் அடிநிலையிலிருந்த பனந்தொழில் வல்லுனர்கள் தம்மை ஒரு ஒருங்கிணைந்த தொழிலாளர் வர்க்கமாக வெளிக்கொணரும் வகையில் இந்தச் சங்கங்களை உருவாக்கினர்.அதனை ஒரு சுரண்டல் எதிர்ப்பு போராட்டத்துக்கான சக்தியாக முன்னெடுத்தனர். இச் சங்கம் அமைந்தவுடன் 8500 சீவல் தொழிலாளர்களின் அங்கத்துவமும் முப்பது நிறுவனங்களும் 450 பதவி அலுவலர்களும் இருந்ததாக நிறுவன அறிக்கைகள் கூறுகின்றன. கார்ல் மாக்ஸ் கூறுவதுபோல சுரண்டலை எதிர்த்துப் போரிடும் ஒரு தொழிலாளர் சக்தியாக இந்த நிறுவனங்கள் சமூக மாற்றத்துக்கு வழிவகுத்தன.

2. மர உரிமை, நில உரிமை தொடர்பிலான சுரண்டலை இச் சங்க உருவாக்கம் தவிர்த்ததால் ஒரு சமூக மாற்றம் சாத்தியமானது என்பது உண்மை. ஆனால் இச் சங்கத்துக்கான சாதிய அடையாளம் இன்றுவரை நிலைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கான அடிப்படைகளில் ஒன்று பாரிய தொழில் நுட்பவியல் மாற்றங்களின் அறிமுகம் ஏற்படவில்லை. சமூக மாற்றம் தொழில் நுட்ப ரீதியாக விஞ்ஞானத்தன்மை பெறும்போது மரபுவழி இழிநிலை அடையாளத்தை இழப்பதன் மூலமான மாற்றமாகின்றது. இந்த மாற்றம் முக்கியமானது. ஏனெனில் எதிர்காலத்தில் தொழில் செய்ய வல்லுனர்கள் முன்வராது போகும் நிலை ஏற்படும். புலப்பெயர்வுகளின் வழியான செல்வழித்தேட்டமும், அதன் வழியான புதிய தொழில் முதலீடுகளும், மற்றும் கல்விசார் விருத்தி நிலையும் ப.தெ.வ.அ. சங்கங்களின் நிலைப்பாட்டுக்கு அப்பால் நிகழ்ந்தவண்ணமே உள்ளதால் சங்கங்கள் தாம் சார்ந்த செயற்பாடுகளை தொழில் நுட்ப ரீதியான முன்னேற்றங்களுடன் முன்னெடுக்க வேண்டியுள்ள 'கள்சீவுதல்' என்ற நிலைக்கு அப்பால்சென்று பனைவள ஆராய்ச்சிப் பயிற்சிகளிலும், பனம் பொருள் உற்பத்திப் பரவலாக்கலும் சந்தைப்படுத்தலும்என்ற அடிப்படைகளிலும் விரிவான மாற்றங்கள் அறிமுகமாகவேண்டியதேவை நெருங்கியுள்ளது. 1975 இல் ஏற்பட்ட சீனி விலை உயர்வின் போது வடபகுதியில் 71 வெல்ல தொழிற்சாலைகளும் 03 பனஞ் சீனி உற்பத்திச் சாலைகளும்117 லட்சம் ரூபா செலவில் இந்தச் சங்கங்களால் நிறுவப்பட்டமை பாரிய பாய்ச்சலாகும். இன்று அவற்றில் தொழிற்படாத நிலையில் பல உள்ளன. என்பதும் மறுக்க முடியாது. ஆனால் வெல்ல உற்பத்தித் தொழிலின் நவீனமாக்கம் இச் சங்கங்களின் வாயிலான வேலைவாய்ப்பு, சாதி அடையாள இழப்பு என்பவற்றை நிச்சயம் தரவல்லது.

3. பெண்களை வலுவூட்டல், பெண்களை மேம்பாட்டில் பங்காளியாக்குதல் என்பன இன்றைய சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் முக்கிய கருப் பொருளாகும். இதனை இச் சங்கங்களும் கருத்திலெடுத்துள்ளமை சமூதாய ரீதியில் பெண்களின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. இச் சங்கங்களின் உப விதிகளின்படி இரண்டு பெண்களின் பிரதிநிதித்துவம் கிளைக் குழுக்கள் வழியாக அமைய முடியும். அத்துடன் 'உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனங்கள்' என்ற பெண்கள் அமைப்பாக்கச் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது. இதன் மூலம் பனங் கற்காரம் செய்தலில்

- தொடர்-16 ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கைப் பயணம்

**பிரான்சிலுள்ள இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னனியின் தலைவர் தேவதாசன் அவர்கள் அண்மையில் இலங்கை சென்று வந்தார். அச்செய்தியறிந்து 'மற்றது' சஞ்சிகையின் ஆசிரியர் கற்சுறா அவர்கள் தேவதாசனிடம் கேட்டறிந்த கொண்ட முக்கிய விடயங்கள் இவை**

*கற்சுறா:-*

***தங்களது இலங்கைப் பயணத்திற்கான அடிப்படை நோக்கம் என்னவாக இருந்தது? எவ்வளவு காலம் அங்கிருந்தீர்கள்?***

**தேவதாசன்:** மே பதினெட்டு 2009க்கு பின்பான இலங்கை அரசியல் சூழல் எவ்வாறு உள்ளது என்பதை அவதானிக்கவும். முப்பது வருட ஆயுதப் போராட்டத்தின் முடிவிற்குப்பின்னாலான தமிழ் மக்களின் மனோ நிலையை தெரிந்து கொள்ளவும், குறிப்பாக தலித் சமூக மக்களின் வாழ்வியல் சூழல், அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சமூக அழுத்தங்களை அறிவதே எனது பிரயாணத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது. ஒரு மாத கால குறுகிய அவகாசமாகவே எனது பிரயாணம் அமைந்தது. மேலும் கணிசமான பணிகளை மேற்கொள்வதற்கு குறைந்தது மூன்று மாதங்களாவது தங்கியிருக்க வேண்டும்.

*கற்சுறா:*

***வன்னி மக்களை இலங்கை அரசு அகதி முகாம்களில் தடுத்து வைத்திருப்பது குறித்து பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஊடகங்களாலும், ஜனநாயக முற்போக்கு சக்திகள் என தங்களை அடையாளப் படுத்துபவர்களாலும் முன்வைக்கப்படும் அரச எதிர்ப்பு பிரச்சாரம் குறித்து என்ன கூறுகிறீர்கள்? உங்கள் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி அந்த அகதி மக்களுக்கு உதவும் திட்டம் ஏதும் கொண்டிருந்ததா?***

**தேவதாசன்:** நீங்கள் குறிப்பிடும் ஜனநாயக முற்போக்கு சக்திகள் பற்றியோ, அரச எதிர்ப்பு பிரச்சார ஊடகங்கள் பற்றியோ அபிப்பிராயம் கூறுவது எனக்கு அவசியமாகப் படவில்லை. முப்பது வருட காலமாக யுத்தம், கொலை, மிரட்டல், அச்சம் போன்ற சூழலில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள் என்பது இவாகளுக்கு மே 18 2009 இற்கு பிறகு மறந்துபோன நிகழ்வாகத்தான் இருக்கிறது. அந்த மக்களின் இன்றைய அவசியமான தேவைகளின் கருணையில் இருந்து பிறக்க வேண்டும் கேள்விகள் என்று நான் நினைக்கின்றேன். நான் அங்குபோன பிற்பாடும், அங்குள்ள மக்களுடன் உரையாடியதன் பிற்பாடும் தான் புரிகிறது. எம்மத்தியில் அதிகமாக நடைபெறுவது 'திண்ணைப் பேச்சு' என்பதாக.

அகதி முகாம்களில் உள்ளவர்கள் பற்றி கூறுவதானால் நான் இலங்கை சென்ற காலத்திலேயே இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுவிட்டார்கள். யாழ்ப்பாணத்துக் குடாநாட்டை நோக்கி அனுப்பப்பட்டவர்களில் பலருக்கு யாழ்ப்பாணம் புதியதொரு பிரதேசமாகவே இருக்கிறது. தமது தலைமுறையினர் அப்பகுதியில் பிறந்தவர்கள் என்ற காரணம் அறியப்பட்டதாலேயே யாழ்ப்பாணம் நோக்கி அவர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். மீதி இருக்கக் கூடியவர்களில் பெரும்பாலானவர்கள் மலையக மக்களாகும். அவர்களால் மலையகத்துக்கு திரும்பமுடியால் உள்ளது. அவர்கள் வாழ்ந்த வன்னிப்பிராந்தியத்தில் கண்ணி வெடிகள் அகற்ற தாமதிப்பதால் அம்மக்கள் முகாம்களில் முடங்கிப் போயுள்ளனர். வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பலரிடம் என்னால் உரையாடக்கூடியதாக இருந்தது. அவர்கள் பட்ட துன்பங்கள், துயரங்களை விபரிப்பதானால் ஒரு பெரிய புத்தகமே எழுதலாம். ஆனாலும் அவர்களிடம் மறுவாழ்விற்கான அத்தியாவசியமான பணம், பொருட்கள் என்பன கணிசமாக கிடைத்து வருகின்றதையும் காணக்கூடியதாக இருந்தது. சர்வதேச நிறுவனங்களும், அரசும், மற்றும் சமூக அக்கறையாளர்களாலும் மேற்படி உதவிகள் கிடைத்து வருகிறது. வன்னி தவிர வடபகுதியில் சொந்தமான வாழ்விடங்கள் இல்லாததன் காரணத்தால் பலர் தமது உறவினர்களுடனும். அரசினால் உருவாக்கப்பட்ட தற்காலிக கூடாரங்களிலும் வாழ்கின்றனர். அரச நிறுவனங்களின் பணியாளர்கள் வன்னிக்கு விரைவாக சென்று தமது பணிகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொளள்ப்பட்டுள்ளனர். ஆனால் சாதாரண மக்களோ மீண்டும் வன்னியில் யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்னும் அச்சம் காரணமாக அங்கு செல்வதற்கு அவர்கள் தயங்குவதையும் என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

வன்னி அகதி மக்களுக்காக எமது தலித் சமூக மேம்பாட்டு முன்னனியின் ஆதரவாளர்களிடமிருந்து பெறப்பட்ட சிறதொகையை நான் கொண்டு சென்றேன். அவ்வுதவியை வன்னி அகதி மக்களுக்கு என்னால் பயன்படுத்த முடியவில்லை. யாழ்நகரிலுள்ள 'திருநகர்' எனும் ஊரிலுள்ள சென் சாள்ஸ் எனும் பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கான சில அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்காக அத்தொகையை நான் பயன் படுத்தவேண்டி ஏற்பட்டது. காரணம் அப்பாடசாலையில் மிக வறுமைப்பட்ட தலித் மாணவர்கள் கல்வி கற்பதோடு, அக்கல்லூரியில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதையும் என்னால் நேரில் காணக்கூடியதாகவும் இருந்தது. அங்கு மதிய உணவு வழங்கப்படும்போது ஒரு சிறுமி தனக்கு கிடைத்த இரண்டு கவள உணவையும் தான் சாப்பிடாது பத்திரப்படுத்தி தனது பையுக்குள் வைப்பதைப்பார்த்து நான் கேட்டேன் ஏன் நீங்கள் சாப்பிடவில்லையா என்று. அதற்கு அந்தச் சிறுமி அம்மா வேலையால் வந்து சமைக்க நேரம் செல்லும் அது தான் நான் தங்கச்சிக்கு கொஞ்சம் கொண்டு போறேன் எனக் கூறியது. அப்படி மிக வறுமையிலுள்ளவர்களே அப்பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்கள்.

*கற்சுறா:*

***நீங்கள் முன்நாள் தலித்போராளிகள் யாரையாவது சந்தித்தீர்களா? அவர்கள் யார்? இருப்பின் அவர்களது யுத்தகால அனுபவங்களும், சமூகம் சார்ந்த மனநிலையும் எவ்வாறுள்ளது?***

**தேவதாசன்:** ஆம் தலித் போராளிகள் பலரை சந்தித்தேன். அவர்களில் படைப்பாளி தெணியான், மற்றும் இராஜேந்திரன், அன்ரனி மாஸ்டர் போன்ற முன்னோடிகளையும் சந்தித்தேன். அவர்களை சந்திப்பதும், அவர்களுடன் உரையாடுவதும் எனது பயணத்தின் முக்கிய நோக்கமாகவும் இருந்தது. சாதிய விடுதலைப் போராட்டத்தில் எதிர்கொண்ட பல அனுபவங்களை அவர்களுடனான உரையாடல் மூலமாக அறிந்துகொண்டேன். தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆயுதப்போராட்டமாக மாறிய



படிப்பகம்

www.padippakam.com

பின் போராளிக்குழுக்களின், குறிப்பாக விடுதலைப் புலிகள் சாதிய விடுதலை இயக்கங்களை தடை செய்த பின்னர் பல சாதிய விடுதலைப் போராளிகள் வாய் மூடி மௌனமாக்கப்பட்டதாகவும், அவர்களில் பலர் கிழக்கு மாகாணம், கொழும்பு போன்ற பகுதிகளில் மறைந்திருந்ததாகவும் தெரிவித்தனர். தமக்கான தலைமை ஒன்று இல்லையே என்பதும், தாம் தொடர்ந்தும் அனாதைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றோம் என்ற ஆதங்கமும் அவர்களிடத்தில் மேலோங்கியிருப்பதை காணக்கூடியதாக இருந்தது. மேலும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை வெகுஜன இயக்கம் போன்ற அமைப்புகளின் அவசியம் இன்றும் உணரப்படுகின்றது.

**கற்சுறா:**
***யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் ஊடகங்களை நீங்கள் அணுகும் வாய்ப்பிருந்ததா? யுத்தத்திற்கும் புலிகள் அழிவிற்கும் பிற்பாடு அங்குள்ள பத்திரிகைகளின் அடிப்படை சார்பு நிலை எவ்வாறு பிரதிபலிக்கிறது?***

**தேவதாசன்:** யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகங்கள் என்பது உயர் சாதியினரின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் நிறுவனமாகவே இயங்கி வருகிறது. அதற்கு பல உதாரணங்களைக் கூறலாம். கடந்த 13-12-2009 இல் இருந்து சிறுபான்மைத் தமிழர் மகாசபை தனது சமூகப் பணிகளை மேற்கொள்ள இருக்கின்றது என்பதான அறிக்கை ஒன்றை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சகல பத்திரிகைகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தும் அது பற்றிய செய்தியை அவர்கள் இதுவரை வெளியிடவில்லை. தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 12-12-2009 இல் மாபெரும் எழுச்சி மாநாடொன்றை நடாத்தியது. அம்மாநாட்டில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு தமது தேவைகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தினர். இம்மாநாட்டிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர், பல்கலைக்கழக துணைவேந்தர் என பல ஆய்வாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விடயத்திற்கு எந்தப்பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

அன்று புலிகளின் தேசியத்திற்கு புகழ் பாடியவர்கள் இன்று சேர்.பொன். இராமநாதனதும், ஆறுமுநாவலரதும் சைவத்தையும், தமிழையும் போற்றிப் புகழ்பாடி தமது பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்பி வருகின்றார்கள். சார்பு நிலை என்பது பற்றி கேட்டீர்கள் நான் முன்னர் குறிப்பிட்டது போல் யாழ் மேலாதிக்கத்தின் மன நிலையிலிருந்துதான் பத்திரிகைகள் செயல்படுகின்றது. வெளிப்படையாகவே சொல்வதென்றால் அனைத்துப் பத்திரிகைகளும் சாதி காப்பாற்றும் பத்திரிகைகளாகவே உள்ளது.

**கற்சுறா:**
***இத்தனை ஆண்டுகால போராட்டத்தின் விளைவாக தமிழர்களை அவர்களுடைய எதிரிகளிடம் கையளிப்பதில்தான் முடிந்திருக்கிறது. கோட்டையிலும், பலாலியிலும், ஆனையிறவிலும் நின்ற இராணுவத்தை எங்கள் வீட்டு முற்றத்திலும் கோடியிலும் கொண்டு வந்து நிறுத்திவிட்டு அவர்கள் போய்விட்டார்கள் 'கடிநாயாக இருந்தாலும் அவர்கள் (புலிகள்) காவல் நாயாக இருந்தவர்கள்' என்பதாக தொடர்ச்சியான தமிழ்-சிங்கள இனவாதத்தை வலுப்படுத்திப் பேணும் வகையிலும், தமிழ்த் தேசிய மனநிலை கொண்டதுமான கட்டுரை ஒன்றை (நிலாந்தன் என்பவர் எழுதியது) பல புகலிடப் புலி எதிர்ப்பாளர்கள் தமது தோள்களில் காவித்திரிகின்றனர் (இணையங்களில் மீழ் பிரசுரிப்பு) உங்கள் யாழ் பயண அனுபவத்தில் அங்குள்ள மக்கள் தாங்கள் தோற்று விட்டதாகவும். தமிழ்த் தேசிய விடுதலையின் அவசியம் கருதுபவர்களாகவும் இருக்கிறார்களா?***

**தேவதாசன்:** சிரிக்கிறதா அழுகிறதா தெரியவில்லை. புலிகள் கடி நாயாகவும், காவல் நாயகவும் இருந்ததென்பதென்னவோ உண்மைதான். அது எந்தவகையிலென்றால் வடக்கு கிழக்குக்கு வெளியில் இருந்த தமிழர்களுக்குத்தான் புலிகள் கடி நாயாகவும், காவல் நாயாகவும் இருந்துள்ளார்கள். கொழும்பில் இருக்கக்கூடிய சிலர் கருதினார்கள் புலிகள் இருப்பதினால் தான் கொழும்பில் தமிழர்கள் மீது சிங்களவர்கள் தாக்குதல் நடத்தவில்லை என்றும். புலிகள் இல்லை என்றால் தாங்கள் சிங்கள அரசாலும் சிங்கள காடையர்களாலம் அழிக்கப்பட்டிருப்போம் என்றும்.

அத்தோடு புகலிடப் பெரும்பான்மை தமிழ்த் தேசிய பற்றாளர்களின் வளமான-பாதுகாப்பான இருப்புக்கும் வசதிகளுக்கும் புலிகள் கடி நாயகவும், காவல் நாயாகவும் இருந்திருக்கிறார்கள். ஆனால் வடக்குக்-கிழக்கு வாழ் மக்களைப் பொறுத்தவரை அரசபடைகளையும் , புலிகளையும் 'கடி நாயாக' மட்டுமே பார்த்தார்கள். அங்கு வாழ் மக்களிடம் தாம் தோற்று விட்டதாகவோ, தமிழ் தேசிய விடுதலை என்பது அவசியம் என்ற கருத்தோ நிலவுவதைக் காணமுடியாதுள்ளது. மாறாக தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற கருத்தே அவர்களிடம் மேலோங்கி நிற்கிறது.

**கற்சுறா:**
***மகிந்த அரசு மீதான விமர்சனங்களையும், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, சுயநிர்ணயம் என்றெல்லாம் பேசப்படுவதையும் நீங்கள் எப்படி எதிர்கொள்கின்றீர்கள்?***

**தேவதாசன்:** முதலில் ஒருவிடயத்தில் நாம் கவனமாக செயல்படவேண்டும். அதாவது எதிர்காலத்தில் எந்தவகையிலும் இனவாத உணர்வுகள் பரவாத வகையில் எமது செயல்பாடுகள் அமையவேண்டும். எந்தத் தலைவர்களையும, எந்தக் கருத்தியலையும் நாம் தொடர்ச்சியாக கொண்டாடிக் கொண்டிருக்கமுடியாது. எமது சமூகம் பல்வேறு குறைபாடுகளைக் கொண்ட சமூகமாக இருக்கிறது. குறிப்பாக எம்மத்தியில் நிலவும் சாதிய ஒடுக்கு முறைகளின் அடிப்படைக்காரணிகளை கண்டறிவதில் எமது கல்விமான்களில் கூட பல குறைபாடுகள் நிலவுகின்றது. அதையெல்லாம் நாம் தொடர்ச்சியாக பேசி உரையாடவேண்டியிருக்கிறது. பல வருடகாலத்தையும், பல்லாயிரக்கணக்கான உயிர்களையும், உடைமைகளையும் இழந்து புலிகள் எமது சமூகத்தை என்ன நிலையில் விட்டுச் சென்றுள்ளார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். பல்வேறு சமூக-சிந்தனை வளர்ச்சிக்கு தடையாக இருந்தது புலிகள். அந்த நிலை இன்று மாறியுள்ளது. இந்த மாற்றத்திற்கான காரணம் மகிந்த ராஜபக்ச என்பதுதானே உண்மை.

இலங்கையில் வாழும் மற்ற இனங்கள் சிங்கள மக்கள் உட்பட, எல்லாவித நிறைவுடனும் வாழ்கின்றார்கள் என்று கூறிவிட முடியாது. கடந்த காலங்களில் தமிழ் அரசியல் தலைமைகளானது தமிழ் பேசும் மக்களின் அனைத்துப்பிரிவினரின் நலன்களின் அடிப்படையில் தமது அரசியலை முன்னெடுத்தவர்களல்ல. தமது மேட்டுக்குடி நலன்கள் சார்ந்த அரசியலையே அவர்கள் முன்னெடுத்தவர்கள். அவர்களின் அதே அரசியல் நிலைப்பாட்டில் தீவிரம் போதாது என்ற குறைபாட்டின் அடிப்படையில்தான் பிற்பாடு இளைஞர்கள் அவர்களது அரசியலை ஆயுங்களுடன் இணைத்து மேற்கொண்டார்கள். முன்னைய தலைமைகள் மேற்கொண்ட அரசியல் சிந்தனைப் போக்கை இளைஞர்கள் கண்டறிய முற்படவில்லை.

இருப்பினும் இடையில் பல்வேறு இயக்கங்கள் சர்வதேச முற்போக்கு இடதுசாரி கருத்தியலைப் பயின்று இலங்கையிலுள்ள அனைத்து ஒடுக்கப்படும் இனங்களின் விடுதலையைக் கருத்தில்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டும் தமது செயல்பாடுகளை மேற்கொண்டார்கள். ஆனால் துரதிஸ்டவசமாக புலிகளின் அராஜக நடவடிக்கைகளால் அவர்கள் அப்பணிகளை தொடர்ந்து பேணமுடியாத சூழல் நிலவியது.

இறுதியில் புலிகள் அழியும் வரை குறந்தபட்சம் பல்வேறு கருத்துக்களையும் பேசுவதற்கான ஒரு ஜனநாயகச் சூழல் எமது பிரதேசங்களில் ஏற்படவேண்டும் என்பதே அடிப்படைத் தேவையாக இருந்தது. இந்த இடைப்பட்ட காலங்களில்தான் நாம் எமது அரசியல் சமூக வரலாறுகளை சீர்தூக்கிப் பார்க்க முற்பட்டோம். எமது இதுவரை கால அரசில் வரலாற்றுச்சாதனை என்ன என்பதை நாம் நிதானத்துடன் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எமது இதுவரை கால அரசியல் சாதனை என்பது தமிழ் மக்களை இனவாதக் கருத்தியலுக்குள் பேணிப் பாதுகாத்துக் கொண்டதேயாகும்.

இவ்வாறான போக்கு வருங்காலங்களில் தவிர்க்கப்படவேண்டும். எனவே மகிந்த அரசு, தமிழ் மக்கள் பிரச்சனை என்கின்றபோது தமிழ் என்கின்ற அடையாளத்தை நாம் முற்றாக தவிர்க்க எண்ணுகின்றோம். கிழக்கைப்போல் வடக்கிலும் மாகாண அதிகாரங்கள் பெறப்படவேண்டும். கிழக்கில் மாகாண அரசு நிறுவப்பட்டபோதும் அதிகாரங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படாமல் மகிந்த அரசு தட்டிக்கழித்து வருவதையும் நாம் காண்கின்றோம். எனவே மாகாணங்களுக்கான நிறைவான அதிகாரங்களை நாம் பெற்றுக்கொள்ள போராடுவதும். அதேபோல் இலங்கையில் வாழும் அனைத்துச் சிறுபான்மை இனங்களும் கௌரவமாக நடத்தப்பட வேண்டும். குறிப்பாக மலையக மக்களுக்கு நாம் இளைத்த கொடுமைகளுக்கு பிராயச்சித்தம் தேடியாகவேண்டும். இவ்வாறாகத்தான் எமது அரசிற்கு எதிரான போராட்டங்கள் அமையும். இதனூடாக தழ்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கும் தீர்வுகளைக் கண்டடையமுடியும் என நம்புகின்றோம்.

கற்சுறா:

*இலங்கையில் புலிகள் அழிக்கப்பட்ட பிற்பாடு பல்வேறு புலி எதிர்ப்பாளர்கள் இலங்கை சென்று வரும் வாய்ப்புகள் நிலவுகிறது. அந்த வகையில் இந்தியாவிலிருந்தும், ஐரோப்பிய நாடுகளிடமிருந்தும் பல புலி எதிர்ப்பாளர்கள், ஜனநாயகத்தை வலியுறுத்திப் பேசி வருபவர்கள் இலங்கை சென்று வந்துள்ளனர். இருப்பினும் அவர்கள் மிகவும் ஆவேசம் கொள்கின்றனர். புலிகள் எவ்வாறான ஜனநாயக மறுப்பைக் கடைப்பிடித்து வந்தார்களோ அதற்கு நிகரான ஒடுக்குமுறைகளை இலங்கை அரசு தனது இராணுவத்தின் மூலமாக மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் ஒரு புகலிட ஜனநாயகப் பற்றாளர் பி.பி.சி ஊடகத்திற்கு பேட்டியளித்துள்ளார் இவ்வாறு. « ."You need to wait at least three hours to board the plane. And all the buses only leave once a day> so that security officials could check the buses at once and relax for the rest of the day>" Mr Kumar says."The biggest mistake of the Tamil Tigers was not to allow any other Tamil voice to operate in their territory."But the irony is that the government is now behaving in the same way as the Tamil Tigers> and I could not see any attempt at reconciliation or to create a vibrant democratic society in Jaffna>" he said ».*"தம்மை இரணுவம் விமானம் ஏற மூன்று மணிநேரம் காக்கவைத்துவிட்டது. புலிகளின் மிகப்பெரிய தவறு மாற்றுக்குரல்களுக்கு அவர்கள் விதித்த தடை உத்தரவாகும். ராஜபக்ச அரசாங்கமும் அதே பாணியில் தான் நடந்து கொள்கிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு ஜனநாயக சமூகம் தோன்ற முடியாதவாறு அரசாங்கம் நடந்து கொள்கின்றது." *இவ்வாறு மேற்படி பேட்டிகளும் கொடுத்துவருகிறார்கள். அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?*

**தேவதாசன்:** இலங்கையில் என்ன உலகத்தில் எங்கையுமே நாம் எதிர் பார்க்கும், உண்மை சொல்லப் போனால் நாம் கனவு காணும் நிறைவான, திருப்திகரமான 'ஜனநாயகம;' ஒன்று கிடைக்கப் போறதில்லை. ஆனால் இலங்கையில் இன்று பேசுவதற்கும், எழுதுவதற்கும் பயம் இன்றி நடமாடுவதற்கும் வாய்ப்புகள் உள்ளது. இந்த சூழலை நாம் பயன்படுத்தி வளர்த்தெடுக்கவேண்டும்.

விமான நிலையத்தில் மூன்று மணித்தியாலம் தாமதிப்பதென்பது ஜனநாயக மறுப்பாக ஏற்றுக் கொள்ள முடியாது. அது இன்று ஒரு நிர்வாகப் பிரச்சனையாக உள்ளது. அது இலங்கைக்கானது மட்டுமல்ல. விமான நிலையத்தில் தாமதிப்பதென்பது இன்று உலகப் பிரச்சனையாக உள்ளது. அதற்கு நான் பெரிதாக விளக்கம் தரத்தேவையில்லை. ஐரோப்பாவில் உள்ள ஜனநாயகத்தையும், முப்பது வருடங்களாக யுத்தம் நடந்த இலங்கையில் இருக்கும் ஜனநாயகத்தையும் பிரித்தறிதலில் தான் சிக்கல் வருகிறது. ஆனாலும் சகலரும் தாம் தாம் விரும்பிய அரசியலை மேற்கொள்வதற்கான கதவு திறக்கப்பட்டுள்ளது. புலிகளின் யுத்தத்தையும், கொலைகளையும் அரசியலையம் நியாயப்படுத்தி வாக்காளத்து வாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று யாழ்ப்பாணத்தில் கூட்டங்கள் நடத்துகின்றது. தமது வழமையான அரசியலைச் செய்கின்றது. இது வந்து ஒரு ஆரோக்கியமான சூழலாகத்தான் நான் பார்க்கின்றேன். எமக்கு தமிழ்த் தேசிக் கூட்டணியோடு கோபமும், வெறுப்பும், அவர்களது அரசியலோட உடன்பாடும் இல்லாது போனாலும் கூட அவர்கள் இன்று சுதந்திரமாக அரசியல் செய்வதென்பது ஒரு ஜனநாயக அம்சமாகத்தான் நான் கருதுகின்றேன்.

கற்சுறா:

*ஈழத்துத் தமிழ் சமூகம் கடந்த 30 வருடமாக கொடிய யுத்தத்திற்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டது. 60களில் எழுந்த சமூகவிடுதலை சாதிய விடுதலை போராட்டங்களெல்லாம் 80களில் எழுந்த தேசியவிடுதலை போராட்டத்திற்குள் முடங்கியது வரலாறு. இன்று இத்தனை அழிவுகளுக்குப்பின்னால் ஈழத்தில் சாதிய சிந்தனை எப்படியிருக்கிறது. ஆரம்பகாலங்களில் இருந்ததுபோல் இருக்கிறதா? அல்லது வீரியம் குன்றியிருக்கிறதா?*

**தேவதாசன்:** முதலில் நாம் எமது சமூக விடுதலை குறித்துப் பேசுவதானால் அது அரசியல் பொருளாதார அடிப்படையில் இருந்து நோக்குவதற்கு முன்பாக எமது சமூகம் ஒரு சாதிய சமூகம் எனும் புரிதலில் இருந்து நோக்கவேண்டும். எமக்கிடையிலான பிளவுகளும், உறவுகளும் சாதிய உணர்வுகளால் பேணப்பட்டு வருகிறது. நாம் சிங்கள அரசுடன் போராடி எமக்கு அரசியல் விடுதலையையோ, பொருளாதார விடுதலையையோ நாம் பெற்றுவிடுது இலகுவாக இருக்கும். ஆனால் நாம் மேற்கொண்ட சமூக விடுதலைக்கான முயற்சிகள் 70 பிற்பகுதியுடன் தடுக்கப்பட்டுள்ளது. எமது சமூகமே சாதிய சமூகமாக இயங்கும் நிலையில் சாதிய சிந்தனையில் வீரியம் குன்றியிருக்கின்றதா? கூடியிருக்கின்றதா எனும் கேள்விக்கு நான் எப்படி பதில் சொல்ல முடியும்.

கற்சுறா:

*ஈழத்தில் வடக்குக் கிழக்கு பிரிந்தபின் கிழக்கு மாகாணம் தனித்த நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டுவருகிறது. வடக்கிலும் புதிய நிர்வாகம் செயற்படத்தொடங்கி அபிவிருத்திகள் பலதரப்பாலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் கிளிநொச்சி முல்லை போன்ற வன்னி*



படிப்பகம்

www.padippakam.com

*மாவட்டங்களது எதிர்காலம் யார் கையில்? கொடியயுத்தம் அழித்த தடையத்திலிருந்து அந்த மக்களை மீட்க யார் கைகொடுப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? அந்த மக்களை இன்னுமொருதரம் தமது அரசியலுக்காக யாரும் பயன்படுத்த முனைவார்களா? ஈழத்து தள நிலவரம் நீங்கள் பார்த்தளவில் எப்படியிருக்கிறது?*

**தேவதாசன்:** யாழ் மேலாதிக்கத்தின் விளைவாகவும், புறக்கணிப்புகளாலுமே கிழக்கு மக்கள் தமக்கான அரசியலை தாமே நிர்வகிப்பதற்கு முன்வந்தார்கள். கிழக்கு நிர்வாகம் அவர்கள் கைக்கு போய்விட்டது. அதேபோல் வன்னி மாவட்டமும் பின்தள்ளப்பட்டு புறக்கணிக்கப்படுமானால் வன்னி மக்கள் எதிர்காலம் அவர்கள் கைக்குத் தான் போக வேண்டும்.அதற்கு பிரிந்து போவதென்பது அர்த்தமல்ல. அங்குள்ள மக்கள் தமது அரசியலை முன்னெடுக்க வேண்டும். வன்னி மக்கள் நந்திக் கடல் ஏரியில் தத்தளித்தபோது கைகொடுத்து மீட்டதும் அரசுதான். இன்றும் அவர்களுக்கான நிவாரண உதவிகளை செய்து கைகொடுப்பதும் அரசுதான். யாருடைய அரசியலுக்கும் பயன்படாது இருக்க வன்னி மக்கள் தான் எதிர்காலத்தில் விழிப்புடன் செயல்பட வேண்டும். ஈழத்து தள நிலவரம் என்பது தற்போது பல்வேறு தளங்களிலும் ஜனநாயகப் பணிகள் புரிவதற்கு சாதகமாகவே உள்ளது.

12 ஆம் பக்க தொடர்சி.....

ஈடுபடுத்தல், மகளிர் அடிப்படைக் கல்வி வழங்கல், சுயதொழில் அபிவிருத்திக் கடன் வழங்கல் போன்ற நடவடிக்கைகள் பெண்களை மையப்படுத்தி செய்யப்பட்டு வந்தாலும் அந்தச் சமூகங்களின் பெண்களின் அணிதிரட்டல் போதுமானதாக இல்லை. குறித்த சாதிப் பெண்கள்மாத்திரமன்றி சமூகத்தின் ஏனைய பெண்களும் ஈடுபடக்கூடிய பனம் பொருள் உற்பத்தி நடவடிக்கைகளை தொழில் நிறுவனமாக்கும் சக்தியை இச்சங்கங்கள் விருத்தி செய்யும்போது அது 'பெண்கள் சமுதாய வலுவூட்டலுக்கும்' மேலெழுமைக்கும் வழிவகுக்கும். இதற்காக இன்று புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் பயிற்சிகள், நிதியுதவிகள் பெறப்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

4 ஒரு சங்கத்தின் அடிக்கட்டுமானத்தில் ஏற்படும் மேம்பாடு நிச்சயம் சமூக மேம்பாட்டுடன் இணைந்ததாக அமைதல் வேண்டும். இல்லையெனின் சங்கத்துக்கும் பயனாளிச் சமூகத்துக்குமான இடைவெளி அதிகரித்து மோசமான நிலமைகள் உருவாகிவிடும். 1982 இல் சங்கங்கள் தமது காணி கட்டிட வசதிகளின் அதிகரிப்புக்கான தீவிர முன்னெடுப்புக்களைச் செய்து இன்றுவரை அது விருத்திப் பாதையிலே சென்றுள்ளது. சங்கங்களுக்கான உத்தியோகத்தர் நியமனங்கள் அதிகரிக்கப்பட்டன. இவை குறித்த சமூகத்தவர்களுக்கான வேலை வாய்ப்புகள் வாழ்க்கைத்தர உயர்வுகளுக்கு வழிவகுத்தமை பொருளாதார மற்றும் உளரீதியான மாற்றங்களைத் தூண்டின என்பது மறுக்க முடியாதது. ஆயினும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் விபத்து நிதி வழங்கும் திட்டம், அங்கத்தவர்களின் சேமிப்புக்கான இலங்கை வங்கி அறக்கொடைத் திட்டம் போன்ற செயற்பாடுகளுக்கு அப்பாலான மிகப்பாரிய சமூக அடிக்கட்டமைப்பு மாற்றங்களை வலுவூட்டல் போன்ற நடவடிக்கைகளை அதிகரிக்கும் போதுதான் சமூகமாற்றம் மேலும் சாத்தியமாக்கப்படும்.

5 சங்கங்கள் உள்ளார்ந்த நிலையில் ஏற்படுத்தும் சமூக மாற்ற வேகத்திலும் உலகளாவிய பண்பாடு மற்றும் சமூக மாற்றங்களின் பரவல் (DIFFUSION) அதிகமானது. பன்னம் செய்தல் தொழிலை இன்று அந்தச் சமூகம் பாரிய அளவில் பின்னடைய விட்டுள்ளது. இதற்கு இலகு எனக் கருதப்படும் பிளாஸ்டிக் போன்ற பொருள் பாவனை முக்கியமானது. எனினும், பொதுமக்களிடம் எமது பண்பாட்டின்
பேறுகளாக பன்னம் தொழில் சார் உற்பத்திகளை பாவிக்கும் நாட்டங்களை அதிகரிக்க வைக்கும் மாற்றங்கள் அவசியமாகின்றன. யாழ்ப்பாணத்து பண்பாட்டின் ஆணிவேரைப் பாதுகாக்கவேண்டிய ஒரு தொழில் முறைசார் சமூகத்தின் பின்னடைவாக இதனைக் கருதலாம்.

6 ஒரு சமூகத்தின் மேலெழுகை என்பது வெறுமனே பொருளாதார பலம், கூட்டுறவு நிலை, வறுமை தணிப்புப் பணிகள் என்பவற்றால் கைகூடுவதில்லை. இவையாவும் சமூகமாற்றத்திற்கான 'முன் தேவைப்பாடுகளாக' அமைந்தாலும் இவற்றுக்கும் மேலாக ஒரு சமூகத் தொகுதியின் அரசியல் பங்கேற்பும், அரசியல் பிரதிநிதித்துவமும் மாற்றத்திக்கான சமூக சக்தியை அதிகரிக்கும். இதில் இச் சங்கம் சிரத்தை காட்டியுள்ளது. சங்கானைச் சங்கத் தலைவராக இருந்த சீவல் தொழிலாளி திரு. சு. நடேசு என்பவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்டசபை உறுப்பினராக இருந்ததனை சங்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவ்வாறே திரு.வி.ஐ. தங்கவேல் பனை அபிவிருத்திச் சபை சார்ந்து தேர்தல் போட்டியில் ஈடுபட்டார். தீ. கி.சிவநேசன் அவர்களின் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்கது. எனினும் இந்தப் பிரதிநிதித்துவங்கள் யாவும் அந்த சமூகங்களின் அடித்தளத்திலுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வுகளை முடுக்கிவிடும் வல்லமைகளை போதுமானளவு கொண்டிருக்கவில்லை. என்பது வெளிப்படையான உண்மை. எனினும் வடக்கு கிழக்கை பொறுத்த வரையில் தகுந்த ஒரு அரசியல் பங்கேற்பும் பிரதிநிதித்துவமும் சமூக மாற்றத்துக்கான வழி என்பது முக்கிய சிந்தனைக்குரியது. இது, குறித்த சமூகத்து வலுவுடன் சம்பந்தப்பட்டதாகும்.

7 இன்றைய உலகளாவிய சமூக மாற்றப் போக்குகளில் உலகமயமாக்கம் மனிதர்கள் மீதிலே திணித்துள்ள ஒரு முக்கிய அம்சம், அடையாள இழப்புக்களின் வழியான சமூகமாற்றம் என்பது. இது எந்தளவிற்கு எமது சமூக அமைப்புக்கு பொருத்தமானது என்பது கேள்விக்குரியது. ஆயினும் சமூக மாற்றங்களை எட்டுவதற்குரிய பொதுநிலை நியமங்கள் சிலவற்றை விளங்கிக்கொள்ள இச் சிந்தனை இச் சங்கங்களுக்கு உதவலாம். கல்வி, பயிற்சி என்பவற்றை பெறுவதன் மூலம் இது சாத்தியமாகும்.

கற்பிதப்படுத்தப்பட்ட அனைத்துப் புனிதங்கள் மீதான விமர்சனங்களை முன்வைப்பதும், இலங்கை தலித் அரசியல் பண்பாட்டுக் கலாசார மேம்பாட்டுக்குமான கருவியாகவும் உலாவும் மின்சஞ்சிகையே...... தூ
புதிய எமது இணையத்தள முகவரி www.thuuu.net